Reg. No M 3066 10.8.61 1

"PAHUTHARIVU"

(REASON)

மலர் 4. இதழ் 1.

தனிப்பிரதி

விலை அஞ். 0—1—6

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், நாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடமைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் கர்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.

பெண்கள் விடுதலைக்கு 'ஆண்மை' அழியவேண்டும் (ஈ. வெ. ரா.)	3
பஞ்சகன் யாஸ்மரே (சித்திரபுத்திரன்)	7
கோடாங்கியால் குறைநீங்குமா? (எஸ். கே. பி. முத்துராஜா)	14
பகற்கனவு (நீலாம்பாள்)	21
பூதோற்றம் (ஆர். மெக்மிலன்)	30
கடவுள் (மாயவரம் கே. பி. பி. எஸ்.)	35
ஞானவிவேகம்	39
மகோன்னத இரவு (மதுரை பி ஜெகதீன்)	43
கண்டல் தூண்டுக்கள் (சே. திருவை நடராஜன்)	54
உண்மை புனர்ச்சி (இங்காசால்)	56

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 4. } ஈரோடு 1938 மே 1. { இதழ் 1.

ஜாதி ஒழிக.

"திவ்ய தரிசனக் தரலாகாதா" என்ற மெட்டு

ஜாதி பேத மொழிவது முறையென்று
சாற்றுவோமே நாம்
மானிடரிற் சிலரை மாநிலத்தனிலே
இனி இழிவு நினைத்தல் நீதியோ
பலபிரிவாய் நம்மைப் படைத்திட்டதாக
பகல்வது முறையாகாதே ஜாதி

உயர்ந்த ஜாதியென்று உரைத்திட்டபேரை
பயமின்றி பழித்திடுவோமே
தாழ்ந்த ஜாதியெனும் தாட்டிக
வார்த்தையை
தரணியிலழித்திடுவோமே ஜாதி

ஈரோட்டி லேபிறந்த ஈடில்லா நம் தலைவர்
ஈ. வெ. ரா. வின் இனிய தொண்டு
மறக்கவும் மனதில்லா மாசுற்ற ஜாதியை
இறக்கவும் இடுதலைக் கண்டு ஜாதி

மகாநாடுகளை மகிழ்வுடன் கூட்டி
தகாத செயல்களைக் காட்டி
தன்மதிப்பியக்கம் தரணியிலோங்க
துன்பங்கள் துளிர்வதும் நீங்க ஜாதி

அடிமை யார்?

சுயமாகச் சிந்தனை செய்யாதவன் அடிமை; அவன் தனக்கும் மனித சமூகத்துக்கும் துரோகியாகிறான்.

வான மண்டலத்துக்கும் நட்சத்திர மண்டலத்துக்கும் கீழே— இயற்கையின் ஆதியந்தமில்லாக் கொடியின் கீழே— ஒவ்வொரு மனிதனும், தனக்கு நிகர் யாருமில்லை யென்ற உணர்ச்சியுடன் நிற்க வேண்டும்.

இங்கர்சால்.

சுதந்திரப் பிரச்சினை.

சுதந்தரப் பிரச்சினை நீதியையும், கருணையையும், நேர்மையையும், அறிவு வளர்ச்சியையும் பொறுத்தது. தான் விரும்பும் உரிமைகளைப் பிறருக்கு வழங்காத மனிதன் ஒருவன் உலகத்தில் உண்டானால் அவன் காட்டுமிராண்டியே ஆவான். தான் விரும்பும் அறிவுச் சுதந்தரத்தைப் பிறருக்கு வழங்க விரும்பாதவன் பொய்யன்; சுயநலக்காரன்; மிருகத்துக்கு ஒப்பானவன்.

சுதந்தரப் பிரச்சினை அறிவு வளர்ச்சியைப் பொறுத்ததென்று மீண்டும் வற்புறுத்துகிறேன். உண்மையான அபிப்பிராயம் கூறுபவன் மீது குற்றம் சாட்டுகிறவனுக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டிருப்பதாகவே எண்ணவேண்டும்.

இங்கர்சால்.

பெண்கள் விடுதலைக்கு 'ஆண்மை' அழியவேண்டும்.

ஈ. வெ. ரா.

பெண்கள் விடுதலையின் பேரால் உலகத்தில் அனேக இடங்களில் அனேக சங்கங்களும், முயற்சிகளும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருவது யாவரும் அறிந்ததே. இம்முயற்சிகளில் ஆண்களும் மிகக் கவலையுள்ளவர்கள்போ ல க் காட்டிக்கொண்டு மிகப்பா சாங்கு செய்து வருகின்றார்கள். ஆண்கள் முயற்சியால் செய்யப்படும் எவ்வித விடுதலை இயக்கமும் எவ்வழியிலும் பெண்களுக்கு உண்மையான விடுதலையை அளிக்க முடி யாது. தற்காலம் பெண்கள் விடுதலைக்காக பெண் மக்க ளால் முயற்சிக்கப்படும் இயக்கங்களும் யாதொரு பலனை யும் கொடுக்காமல் போவதல்லாமல் மேலும் மேலும் அவை பெண்களின் அடிமைத்தனத்திற்கே கட்டுப்பாடுகளை பலப் படுத்திக்கொண்டேபோகும் என்பது நமது அபிப்பிராயம். எதுபோலென்றால் இந்தியப் பொது மக்கள் விடுதலைக்கு வெள்ளைக்காரரும், பார்ப்பனரும் பாடுபடுவதாக ஏற்பாடுகள் கடந்துவருதின் பலனாக எப்படி காளுக்குநாள் இந்திய மக்க ளுக்கு அடிமைத்தனம், விடுலை பெறமுடியாதபடி பலப்பட்டு என்றென்றைக்கும் கட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறதோ, அது போலவும், சமூக சீர்திருத்தம், சமத்துவம் என்பதாக வேஷம் போட்டுக்கொண்டு பார்ப்பனர்களும், புராணக்காரர்களும் சீர்திருத்தத்தில் பிரவேசித்து வருவதன் பலனாக எப்படி சமூகக்கொடுமைகளும், உயர்வு தாழ்வுக்களும் சட்டத்தினாலும் மதத்தினாலும் நிலைபெற்று பலப்பட்டு வருகின்றதோ அது போலவுமே என்று சொல்லலாம்.

அன்றியும் ஆண்கள், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடு வதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன் பெண் கள் என்றும் விடுதலை பெறமுடியாத கட்டுப்பாடுகள் பல்ப பட்டுக்கொண்டிருக்கின்றன. பெண்களுக்கு மதிப்புக்கொடுப் பதாகவும் பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும்

ஆண்கள் காட்டிக்கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவ தற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங் காவது நரிகளால் ஆடு, கோழிகளுக்கு விடுதலை உண்டா குமா? எங்காவது முதலாளிகளால் தொழிலாளிகளுக்கு விடு தலை உண்டாகுமா? எங்காவது வெள்ளைக்காரர்களால் இந்தியர்களுக்குச் செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்ப னர்களால் பார்ப்பனரல்லாதார்களுக்குச் சமத்துவம் கிடைக் குமா? என்பதை யோசித்தால் இதன் உண்மை விளங்கும். அப்படி ஒருக்கால் ஏதாவது ஒரு சமயம் மேற்படி விஷயங் களில் விடுதலை உண்டாய் விட்டாலும்கூட ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது என பதை மாத்திரம் உறுதியாய் நம்பலாம். ஏனெனில் ஆண்மை என்னும் பதமே பெண்களை இழிவுபடுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைப் பெண்கள் மறந்துவிடக்கூடாது. அந்த "ஆண்மை" உலகி லுள்ளவரையிலும் பெண்மைக்கு மதிப்பு இல்லையென்ப தைப் பெண்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். உலகத்தில் "ஆண்மை" நிற்கும்வரையில் பெண்கள் அடி மையும் வளர்ந்தேவரும். பெண்களால் "ஆண்மை" என்ற தத்துவம் அழிக்கப்பட்டாலல்லாது பெண்களுக்கு விடுதலை இல்லையென்பது உறுதி. "ஆண்மை"யால் தான பெண்கள் அடிமையாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சுதந்தரம், வீரம் முதலிய குணங்கள் உலகத்தில் "ஆண் மை"க்குத்தான் உதவியாக்கப்பட்டு விட்டன. "ஆண்மை"க் குத்தான் அவைகள் உண்டென்று ஆண்மக்கள் முடிவுகட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதை மாத்திரம் பெண்கள் நன்றாய் உணரவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகின்றோம்.

எனவே பெண்மக்கள் அடிமையானது ஆண்மக்களா லேயேதான் ஏற்பட்டது என்பதும், அதுவும் "ஆண்மை"யும் பெண் அடிமையும் கடவுளாலேயே ஏற்படுத்தப்பட்டதாக எல்லா ஆண்களும் கருதிக்கொண்டிருக்கிறார்கள் என்பதும், அதோடு பெண்மக்களும் இதை உண்மை என்றே நினைத துக்கொண்டு வந்த பரம்பரை வழக்கத்தால் பெண் அடிமைக் குப் பலம் அதிகம் ஏற்பட்டிருக்கின்றதென்பதும் கடுநிலை மைப் பெண்களுக்கும், ஆண்களுக்கும், யோசித்துப்பார்த் தால் விளங்காமற்போகாது. பொதுமக்கள், பிறவியில் உயர்வு தாழ்வு அழியவேண்டுமானால் எப்படிக் கடவுளாலேயே

மக்களுக்குப் பிறவியில் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டிருக்கின்றது என்ற இந்துமதக் கொள்கையைச் சுட்டுப் பொசுக்க வேண்டியது அவசியமோ, அதுபோலவே பெண்மக்கள் உண்மை விடுதலை பெற்று, உண்மைச் சுதந்திரம் பெறவேண்டுமானால், "ஆண்மையும்", "பெண் அடிமையும்" கடவுளால் உண்டாக்கப்பட்டவை என்பதற்குப் பொறுப்பாயுள்ள கடவுள் தன்மையும் ஒழிந்தாகவேண்டும்.

பெண்கள் விடுதலை பெறுவதற்கு இப்போது ஆண்களைவிடப் பெண்களே பெரிதும் தடையாயிருக்கின்றார்கள். எனெனில் இன்னமும் பெண்களுக்கு தாங்கள், முழு விடுதலைக்கு உரியவர்கள் என்கின்ற எண்ணமே தோன்றவில்லை. தங்களுடைய இயற்கைத் தத்துவங்களின் தன்மையையே தங்களை ஆண் மக்களுக்கு அடிமையாகக் கடவுள் படைத்திருப்பதின் அறிகுறிகளாய்க் கருதிக்கொண்டிருக்கிறார்கள். எப்படியெனில், பெண் இல்லாமல் ஆண் வாழ்ந்தாலும், வாழலாம் ஆனால் ஆண் இல்லாமல் பெண் வாழமுடியாதென்று ஒவ்வொரு பெண்ணும் கருதிக்கொண்டிருக்கிறாள். அப்படி அவர்கள் கருதுவதற்கு என்ன காரணம் என்று பார்ப்போமானால், பெண்களுக்குப் பிள்ளைகள் பெறும் தொல்லை ஒன்று இருப்பதால், தாங்கள் ஆண்கள் இல்லாமல் வாழமுடியும் என்பதை ருஜுப்படுத்திக்கொள்ள முடியாதவர்களாயிருக்கின்றார்கள். ஆண்களுக்கு அந்தத்தொந்தரவு இல்லாததால் தாங்கள், பெண்கள் இல்லாமல் வாழமுடியும் என்று சொல்ல இடமுள்ளவர்களாயிருக்கின்றார்கள். அன்றியும் பிள்ளை பெறும் தொல்லையால் தங்களுக்குப் பிறர் உதவி வேண்டியிருப்பதால் அங்கு ஆண்கள் ஆதிக்கம் ஏற்பட இடமுண்டாய் விடுகின்றது. எனவே உண்மையான பெண்கள் விடுதலைக்குப் பிள்ளைபெறும் தொல்லை அடியோடு ஒழிந்துபோகவேண்டும். அது ஒழியாமல் சம்பளம் கொடுத்து புருஷனை வைத்துக்கொள்வதாயிருந்தாலும் பெண்கள் பொதுவாக உண்மை விடுதலை அடைந்துவிட முடியாது எனச் சொல்லுவோம். இம்மாதிரி இதுவரை வேறுயாரும் சொல்லவதாகக் காணப்படாவிட்டாலும் நாம் இதைச்சொல்லுவது பெரிதும் முட்டாள் தனமே என்பதாகப் பொதுமக்கள் கருதுவார்கள் என்று இருந்தாலும், இந்த மார்க்கத்தைத் தவிர—அதாவது பெண்கள் பிள்ளைபெறும் தொல்லையில் இருந்து விடுதலைபாக வேண்டும் என்கின்ற மார்க்கத்தைத் தவிர, வேறு எந்தவகையிலும் அவர்களுக்குவிடுதலையில்லை

என்கின்ற முடிவு நமக்குக் கல்லுப்போன்ற உறுதியுடையதாயிருக்கின்றது. சிலர் இதை இயற்கைக்கு விரோதமென்றும் சொல்லவரலாம். உலகத்தில் மற்றெல்லாத் தாவரங்கள், ஜீவப்பிராணிகள் முதலியவைகள் இயற்கைவாழ்வு நடத்தும் போது மானிட வாழ்க்கையில் மாத்திரம் இயற்கைக்கு விரோதமாகவே—அதாவது பெரும்பாலும் செயற்கைத் தன்மையாகவே வாழ்வு நடத்தி வருகின்றபோது இந்த விஷயத்திலும் இயற்கைக்கு விரோதமாய் நடைபெறுவதில் ஒன்றும் முழுகிப்போய்விடாது.

தவிர, பெண்கள் பிள்ளைபெறுவதை நிறுத்தி விட்டால் "உலகம் விர்த்தியாகாது, மானிடவர்க்கம் விர்த்தியாகாது" என்று தர்மநியாயம் பேசச் சிலர் வருவார்கள். உலகம் விர்த்தியாகாவிட்டால் பெண்களுக்கு என்ன கஷ்டம்? மானிடவர்க்கம் பெருகாவிட்டால் பெண்களுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடும்? அல்லது இந்தத் தர்மநியாயம் பேசுபவர்களுக்குத்தான் என்ன கஷ்டம் உண்டாய்விடும் என்பது நமக்குப் புரியவில்லை. இதுவரையில் பெருகிக்கொண்டுவந்த மானிடவர்க்கத்தால் ஏற்பட்ட நன்மைதான் என்ன என்பது நமக்குத் தெரியவில்லை.

பெண்களின் அடிமைத்தன்மை, பெண்களை மாத்திரம் பாதிப்பதில்லை. அது மற்றொரு வகையில் ஆண்களையும் பெரிதும் பாதிக்கின்றது. இதைச் சாதாரண ஆண்கள் உணருவதில்லை. ஆனால் நாம் இந்தக் காலத்தில் அதைப்பற்றி சிறிதும் கவலை கொள்ளவில்லை. பெண்களைப்பற்றியே கவலை கொண்டு சொல்லுகின்றோம். தற்கால நிலைமையில் பெண்கள் விடுதலைக்குப் பெண்கள் வேறு எவ்விதமான முயற்சி செய்தாலும் சிறிதுசிறிதாவது ஆண்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கலாம். ஆனால் இந்தக் காரியத்தில், அதாவது பெண்கள் பிள்ளை பெறுவதில்லை என்கின்ற காரியத்தில், ஆண்களுக்கு எவ்விதக் கஷ்டமும் நஷ்டமும் கிடையாது என்பதோடு ஆண்களுக்கு இஷ்டமும் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். எப்படியெனில் ஒருமனிதன் தான் பிள்ளை குட்டிக்காரனாய் இருப்பதினாலேயே, தான்யோக்கியமாகவும், சுதந்திரமாகவும் நடந்துகொள்ளப் பெரிதும் முடியாமலிருக்க வேண்டியவனாய் விடுகிறான். அன்றியும் அவனுக்கு அனாவசியமான கவலையும் பொறுப்பும் அதிகப்படவும் நேரிடுகின்றது. மற்றபடி இதனால் ஏற்படும் மற்ற விஷயங்களையும் முறைகளையும் விரிக்கில் பெருகும் என்று இத்துடன் முடித்துக் கொள்கின்றோம்.

'பஞ்சகன்யாஸ்மரே .....'

(சித்திர புத்திரன்)

LIர்ப்பன பாஷையில் ஓரு தோத்திர ஸ்லோக முண்டு. என்னவென்றால், ஆகல்யா, துரோபதி, சீதா, தாரா, மண்டோதரி, ஸ்மிருதா, பஞ்சகன்யாஸ் மாரே நித்தயம் மஹாபாதக நாசனம்'' இதன் கருத்து அகல்யை துரோபதை, சீதை, தாரை, மண்டோதரி ஆகிய ஐந்து கன்னிகைகளை தினம் நினைத்தால் மஹாபாதக மெல்லாம் நாசமாய் விடும் என்பதே. இதில் ஏற்பட்ட விவகாரத்திற் காகத்தான் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லை' என்கிற பழ மொழி உண்டாக்கப்பட்டது. விவகாரத்தின் தன்மையாவது:-

கோபமில்லாமல், பகுத்தறிவோடு கேட்க வேண்டும். ஏனென்றால், கோபம் வந்தால் பார்ப்பான் ஏமாற்றி விடுவான். கோபமிலாவிட்டால் தான் அதிலிருக்கும் ரகசியம் விளங்கும். நான் கிளப்பப்போகும் விவாதம் இந்த ஸ்லோகத்தை எந்தப் பார்ப்பான் எழுதினானோ அந்தப்பார்ப்பான் எழுதி வைத்த சங்கதியைத்தான் சொல்லப்போகிறேன். ஆதலால் நான் என் உத்தேசப்படி சொல்லப்போவதாக நினைத்து ஏமாந்து போகாதீர்கள். இதில் கண்டிருப்பது வாஸ்தவமா, இல்லையா என்று ஒவ்வொரு பார்ப்பானையும் கேளுங்கள்; வாஸ்தவமல்ல வென்று சொன்னால் என்னைக் கேளுங்கள். முதலாவது அந்த ஸ்லோகத்தில் மேல்கண்ட ஐந்து பெண்களையும் கன்னிகைகள் என்று குறிப்பிட்டிருக்கிறது. கன்னிகை என்றால் கல்வி அறியாதவள். அதாவது புருஷர்கள் சாவகாசம் தொடங்காதவள், கல்யாணமில்லாதவள் என்பது பொருள். ஆகையால் அந்த ஸ்லோகம் முன்னுக்குப்பின் முரணானது என்று சொல்லுவேன்.

ஓரு சமயம் பார்ப்பனர்கள் இதற்கு இந்த சுலோகத்தில் வேறு பெண்களைக் குறிப்பிட்டு நினைக்கும்படி சொன்னதின் கருத்து கன்னித்தன்மையை உத்தேசித்ததல்ல. அவர்களு

டைய கற்புத் தன்மையைப் பற்றி என்று சமாதானமாகச் சொல்ல வருவார்களானால், அதைப்பற்றி சற்று யோசிப் போம்.

இந்த ஐந்து பெண்களையும் நான் 1 தாரை, 2 அகலியை 3 துரௌபதை, 4 சீதை, 5 மண்டோதரி என்கிற வரிசையில் எடுத்துக் கொள்ளுகிறேன்.

முதலாவது தாரை. தாரை என்பவள் தேவ குருவாகிய பிரகஸ்பதியினுடைய பெண்சாதி. இந்தம்மாளைப்பற்றிய விஷயம் அறிவதற்கு கட்டுச்சாதம் கட்டிக்கொண்டு காதம் காதமாய் ஊர்பயணம் போக வேண்டியதில்லை. இன்றைக்கும் தெருத்தெருவாய் தாரையும் சந்திரனும் படுத்து உருளுவதும், நிர்வாணமாய் நின்றுகொண்டு சந்திரனுக்கு எண்ணெய் தேய்ப்பதுமான சத்காலட்சேபத்தை தினம் தினம் பார்த்து வருகிறோம். தாரையம்மன் புருஷனே சங்கதி தெரிந்து இரண்டுபேருக்கும் சாபமிட்டதும், இவர்கள் இரண்டுபேருக்குமாக பிறந்த குழந்தை புதன் என்பவன் இருப்பதும் மேற்படி பார்ப்பனர்கள் சாஸ்திரங்களிலேயே இருக்கிறது.

ஆகவே குருவின் யோக்கியதை, குருபத்தினியின் யோக்யதை, சிஷ்யனின் யோக்கியதை ஆச்சிரமத்தின் யோக்கியதை, ஆரிய காரீகத்தின் யோக்கியதை ஆகிய இவ்வியவுக்கும் தாரையம்மாள் உதாரணமாக விளங்குகிறாள். இதைவிட லாம்விட கற்பின் லக்ஷணத்திற்கும் இது ஓர் ஆரிய இலக்கியமாய் விளங்குகின்றது.

இரண்டாவதான அகலியை அம்மாள் விஷயம். அகல்யை அம்மாள் என்பவள் கௌதம முனிவர் என்கின்ற ஓருருஷியின் பெண்டாட்டி. தெய்வராஜனான இந்திரன் இந்த அம்மாள் மேல் ஆசைப்பட்டு, மாறுவேஷம் பூண்டு வீட்டிற்குள் நுழைந்ததாகவும், பிறகு ஒருவருக்கொருவர் இன்னார் என்று தெரிந்துகொண்டு இரண்டுபேரும் சுகித்ததாகவும், ருஷி இந்த விஷயம் தெரிந்து இருவரையும் தண்டித்ததாகவும், அத்தண்டனையால் இந்திரனுக்குச்சரீரமெல்லாம் பெண் குறியாகவும், அகலியை கல்லாகவும் ஆய்விட்டதாகவும் பார்ப்பன சாஸ்திரங்கள் என்பவைகளே சொல்லுகின்றன. அதுவும் தெருவில் போகின்ற சாஸ்திரங்கள் சொல்லவில்லை. ஐந்தாம் வேதம் என்று சொல்லப்படுவதாகிய இராமாயணம், பாரதம் முதலியவைகளில் தான் இந்த உண்மைகள் சொல்

லப்படுகின்றன. இதனால் தேவர்களின் அரசனின் யோக்கியதையும், ரிஷி பத்தினிகளின் போக்கியதையும் விளங்குகின்றது.

மூன்றாவது, துரௌபதையம்மன் சங்கதி. இந்தம்மாள் முதலில் ஒரு புருஷனை மாத்திரம் கட்டிக்கொண்டு, பிறகு மாமியார் இஷ்டப்படி, மற்றும் கால்வருக்கும் பெண்டாட்டியாக இருந்து வந்திருக்கிறாள். ஐந்துபேரிருந்தும் ஆசை தீராமல் இன்னொரு புருஷனையும் மனதில் கினைத்து கினைத்து வருந்தியிருக்கின்றாள் என்பதை தானே ஒப்புக்கொண்டதல்லாமல் உலகப் பெண்கள் பதிவிரதைகளாக இருக்கவேண்டுமானால், ஆண்டிக்குரே இருக்கக்கூடாது என்று தீர்ப்புங் கூறிவிட்டாள். இதனால் அக்காலக் கற்புக்கு லக்ஷணம் புருஷனும், மாமியாரும் யாரிடம் போகும்படி சொன்னாலும் போய்த்தான் ஆகவேண்டு மென்பதும், அதுவும் கற்பில் சேர்ந்ததுதான் என்பதும், பிறகு தன்னிஷ்டப்படி யாரை ஆசைப்பட்டாலும் அதவும் கற்புடன் சேர்ந்ததுதான் என்பதும் அக்கால வழக்கத்தில் இருந்தாய் விளங்குன்றது. ஆகவே ஐந்து கன்னிகைகளில் மூன்றுபேர் சங்கதி இப்படியிருந்கின்றதே என்று கேட்கப்படும் கேள்விகளுக்குத் தான் பார்ப்பனர்கள் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லை' என்றுசொல்ல அதிலிருந்து இந்தப் பழமொழி ஏற்பட்டது.

இந்த இரண்டில் ஒன்றும் குற்றமில்லையா என்று பார்த்தால் அதிலும் ஒன்றைக்கழிக்க வேண்டியதாகத்தான் இருக்கின்றது. அதோபோடு கழிக்காவிட்டாலும் சந்தேகத்திலாவது வைத்துத் தீரவேண்டியதாகத் தானிருக்கின்றது

கான்காவதான சீதையம்மாள் சங்கதியை பார்த்தால் முன்சொன்ன கதைகளின்படி அவ்வளவு இல்லாவிட்டாலும் உத்தம ஸ்திரீ என்றோ முழுதும் பரிசுத்தமானவளென்றோ, கற்புக்கரசி பென்றோ சொலவதற்கில்லை. குணவிஷேசத்தைப் பற்றியோ வென்றாலும், மாயமானைத் தூரத்திக்கொண்டு ராமர் போன காலத்தில் வெகு தேரம்வரை திரும்பிவராதது கண்டு புருஷனைப்போய்ப் பார்த்து வரும்படி சீதை, லக்ஷ்மணனுக்குச் சொல்ல, லக்ஷ்மணன் போகவேண்டிய அவசியமில்லை, ராமர் எப்படியும் திரும்பி வருவார் என்று சொன்னதற்கு அண்ணன் செத்தால் என்னைக் கைப்பற்றலாம் என்று பார்க்கின்றாயா என்று சொன்னதிலிருந்தே லட்

சுமணனிடம் பழகிய சீதைக்கும் போகிய அறிவும், உயர் குணமும், விஷயத்தை அறியும் சக்தியும் இல்லை யென்கின்ற தத்துவமும் நன்றாய் விளங்குகினறது. தவிர, சீதையிடம் வெகுகாலம் நன்றாய்ப் பழகிய அவள் புருஷனாகிய ராமனும் பல தடவை சீதையின் கற்பில் சந்தேகப்பட்டிருக்கிறான். அதாவது ராவணனைக் கொன்றபின் சீதையை முதல் தடவை சந்தேகப்பட்ட போது சீதையிடம் என்ன சொல்லுகிறான் என்றால் ''ஏ சீதை, நான்உன்மேல் ஆசைப்பட்டு உன்னை மீட்டுக்கொண்டு போவதற்காக ராவணனிடம் யுத்தம் செய்யவில்லை. பின் என்னவென்று கேட்பாயானால் ஒருவன் பெண்ஜாதியை மற்றொருவன் அடித்துக்கொண்டு போய்விட்டால் அவனைச் சும்மா விட்டுவிடுவது வீரனுக்கு அழகாகுமா என்கின்ற ரோசத்தின்மேல் தான் சண்டைபோட்டு அவனைக்கொன்றேன். மற்றபடி ஒரு துஷ்டன் வீட்டில், அதுவும் அவனுடைய அதிகாரத்திற்கும் பலத்திற்கும் கட்டுப்பட்டு 10 மாதம் வசித்த தன் பெண்சாதியை சுயமரியாதையுள்ள எவனாவது மறுபடியும் சேர்த்துக்கொள்வானா?'' என்று சொன்னதோடல்லாமல் சகல வசதியும் அவனுடைய சுவாதீனத்திலிருந்த நீ, அவனுக்கு வசப்படாமலிருந்திருக்க முடியுமா? ஆதலால் நீ எங்கே வேண்டுமானாலும் உன்னிஷ்டப்படி போகலாம். உன்னை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். கோபத்தால் சொல்லவில்லை நெடுநேரம் ஆலோசித்து செய்த முடிவு இது'' என்று சொன்னான்.

(இந்த இடத்தில் ராமன் உலக அபவாதத்திற்குக் கட்டுப்பட்டு இப்படி சொல்லவில்லை. தானே சந்தேகப்பட்டு ஒரு வித முடிவு செய்துகொண்டு சொல்லுகிறான் என்றுதான் அர்த்தம்) 'அசோகவனம் எதிரி வீட்டில் வசித்த நீ' என்பதால் இதுவரை உயிர் வைத்திருந்தாயே என்கின்றகருத்தும் தொக்கியிருக்கின்றது.

இதற்கு சீதை சொல்லும் பதில் என்ன வென்றால்:—

''ஏ ராமா, நீ சொல்வது உண்மையா? அதற்கு நான் என்ன செய்யக்கூடும். நானோ ஒரு பெண். ஒண்டிபாயும் அனாதையாயும் இருந்தவள். ராவணனோ ராட்சசன். அவ்வற்ற பலசாலி. என்னால் கூடியவரை தடுத்துப் பார்த்தேன் எனக்கு எள்ளளவாவது அவனுடன் போகவேண்டும் என்கின்ற ஆசை யிருந்ததா? விதியை மோகவேண்டியதே தவிர

என்னைக் குற்றஞ் சொல்லக்கூடாது. என் தேகம்தான் பிற ருக்கு வயப்பட்டதே ஒழிய என் ஹிருதயம் அப்பொழுதும் இப்பொழுதும் எப்பொழுதும் உன்னிடத்திலேயே இருக்கின் றது. சுதந்திரமற்ற நான் என்ன செய்ய முடியும்? அநு மானை அனுப்பி நான் இருக்குமிடத்தையும் ஸ்திதியையும் அறிந்துவரச் சொன்னதின் மூலம், நான் லங்கையில் ராவண னுடைய வீட்டில இருப்பதாகத் தெரிக்கவுடனே என்னை ன் தள்ளிவிடவில்லை'' என்றுதான் சொன்னாள். (இது வால்மீகி ராமாயணம் யுத்த காண்டம் 117,118-வது சருக்கத் தில் காணப்படுவது) இந்த இடத்தில் ராமன்சீதையைப்பார்த் து நீ கற்பழித்துவிட்டாய் என்று நான் தீர்மானித்துவிட் டேன் என்று வெளிப்படையாய் சொல்லிக் காட்டியதற்கு சீதை ன் அப்படி ஒன்றும் கடக்கவில்லை என்று தைரிய மாய் சொல்லியிருக்கக் கூடாது என்கின்ற கேள்விக்கு பதில் இல்லை. அதோடு என் சரீரம் அவன் வயப்பட்டுவிட்டது. ஆனால் அப்போதும் மனம் உன்னிடம்தான் இருந்தது. வித னையதோக வேண்டுமே யொழிய என்னை தோகக்கூடாது. ராவ ணன் வீட்டில் இருந்ததையும் என் ஸ்திதியையும் அனுமான் பார்த்துவிட்டு வந்து சொல்லி இருப்பாரே அப்போதே என் என்னை தள்ளிவிட்டதாக சொல்லி அனுப்பவில்லை. என்ப தாக வெல்லாம் சொல்லுவதினால் விஷயம் சந்தேகத்திற்கா வது இடமுண்டாகிறதா, இல்லையா என்பதை யோசித்துப் பாருங்கள். ஒரு சமயம் இராவணன் மீது அதிகமானபழி யைச் சுமத்த வால்மீகி வேண்டுமென்றே இப்படி எழுதி இருக்கக்கூடும் என்று சொல்வதானால் அது வேறு விஷயம். என்னவென்றால் அது ராவணன் சுபாவத்தைப்பற்றிப் பேசும் போது கவனிக்கவேண்டிய விஷயம்.

தவிர மற்றொரு தடவை வண்ணான் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு கொஞ்சமும் கூட முன் பின் யோசிக்காமல் திடீரென்று லக்ஷ்மணனை விட்டு சீதையை தூக்காட்டில் கொண்டுபோய் விட்டு வந்ததும், அங்கு சீதை தன் கற்பைப் பற்றி யார் என்ன சொல்லிவிடப்போகிறார்களோ எனப் பயந்து "லக்ஷ்மணா, இதோபார் நான் இப்பொழுது கர்ப்ப மாயிருக்கிறேன்'' என்று சொன்னதும், காட்டில் இரட்டைப் பிள்ளை பெற்றதாக ஒரு ராமாயணத்திலும், தர்ப்பை கிள் ளிப்போட்டு வால்மீகி ஒரு பிள்ளையை உண்டாக்கினார் என்று மற்றொரு ராமாயணத்திலும் சொல்லப்பட்டாலும் இந்த பிள்ளைகளை ராமன் ஒப்புக்கொள்ளாமல் வால்மீகி

முதலிய எவ்வளவோ பெரிய தவ சிரேஷ்டர்கள் என்போர்கள் பிரமாணம் செய்தும் ஒப்புக்கொள்ளாமல் மறுபடியும் தெருப்பில் இறங்கும்படி சொன்னதும், அதற்கு சீதை கட்டுப்படாமல் உலக அபவாதத்தைதோ அல்லது ராமனுடைய சந்தேகத்தையோ நிவர்த்தி செய்ய வேண்டாமா என்கின்ற கவலையில்லாமல் பூமியைப் பிளக்கச் செய்து, பூமியில் இறங்கி மறைந்து விட்டான் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இன்னமும் என்னென்னமோ இருந்தாலும் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு இதுவே போதும்.

எனவே சீதையின் விஷயமானது சந்தேகப்படுவதற்கில்லாமல் போகவில்லை என்பதோடு, சீதையின் பரிசுத்தன்மையும், ராமனின் விஷமத்தன்மையும் எப்படிப்பட்டதென்று விளக்கவும், ஆரியர் பழக்க வழக்கங்களும் அக்காலத்திய ஆண் பெண்கள வாழ்க்கை நிலைமையும் வெளியாகவும் உதவுகின்றது

கடைசியாக மீதி இருப்பது ஐந்தாவதான மண்டோதரி அம்மாள், இந்தம்மாள் விஷயத்தில் ஒரு தகராரையும் காணோம். கம்ப ராமாயணத்தில், புருஷன் பிரிந்த உடன் செத்து விட்டான் என்கின்ற சங்கதி தெரிந்து அழுது யிர் விட்டுவிட்டதாகக் காணப்படுகின்றது. தவிரவும் செத்துப் போன ராவணனைப் பார்த்து அழும்போது சீதை குலத்திலாவது ரூபத்திலாவது குணத்திலாவது சாமர்த்தியத்திலாவது என்னைவிட சிறந்தவளா என்று மாத்திரம் கேட்டிருக்கின்றார்கள். இது சீதையின் குணத்தை 10 மாதம் நேரிலிருந்து பார்த்தவள் கேட்டிருப்பதால் இதில் மண்டோதரி மேல் குற்றம் சொல்வதற்கில்லை. ஆனால் சீதையின் குணம்தான் வெளியாக்கப்பட்டதாக வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆதலால் மண்டோதரியின்பால் மாத்திரம் குற்றம் சொல்ல இடமில்லை. கற்புள்ள பெண் என்றே சொல்லலாம். ஆனால், இது இராஜிடத் திறப்புக்கும் இலக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.

பொதுவாக பஞ்ச கன்னிகைகளின் யோக்கியதையைப் பார்க்கின்றபோதும், கற்பு இலக்கணங்களைப் பார்க்கின்றபோதும், குரு, அரசன், ரிஷி, கடவுள் என்கின்றதைப் பார்க்கின்ற போதும் கன்றாய் கவனிததால் இதன ஆபாசங்கள்

விளங்குவதோடு ஐந்துக்கு இரண்டாவது சுத்தமாய் தேய்கின்றதா என்பது வெளியாகும்.

முதலாவது விஷயம், குருபத்தினியின் சங்கதியையும் சிஷ்யனின் யோக்கியதையும், வெளியாக்கிற்று. இந்த இரண்டாவது விஷயம் தேவர்களுக்கெல்லாம் அரசனாயிருப்பவன் யோக்கியதையும் ரிஷி பத்தினியின் யோக்கியதையையும் வெளிடாக்கிற்று. இந்த இரண்டு விஷயமும் புருஷர்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்பதையாவது காட்டிற்று. மூன்றாவது விஷயமோ புருஷனும் ஒப்புக் கொண்டான், மாமியும் ஒப்புக்கொண்டார்கள். உலகமும் ஒப்புக் கொண்டது என்பதைக் காட்டிற்று. காலாவது விஷயம், அவதாரங்கள் என்பதின் யோக்கியதையையும் வெளியாகிற்று.

மிஞ்சியது இராக்ஷசர்கள் என்றும் இராக்ஷச ஸ்திரீகள் என்றும் ஆரியர்கள் எப்பேர்ப்பட்டவர்களை சொல்லுகிறார்கள் சொல்லி வந்திருக்கின்றார்கள் என்பதையும் ஒரு தாசிவிடப் பெண்ணின் கற்பின் கிழுக்குள் ஆரியர்கள் எப்படி வந்து கலந்து கொள்ளுகின்றார்கள் என்பதையும் வெளியாக்கிற்று. இந்த பழமொழி, ஒன்று உலகத்தை ஏமாற்றச் செய்திருக்கவேண்டும் அல்லது இது அவர்களின் பழக்க வழக்கமாயிருக்க வேண்டுமே. ஆகவே ஐந்துக்கு இரண்டுகூட அவர்கள் சொற்களில் உண்மையிருந்தால் அதுவும் நம்முடைய விஷயங்களில்தான் என்பதும் இந்த விஷயத்தினால் வெளிப்படுத்துகின்றேன்.

பாதரசத்தால் ஓடும் கப்பல்.

தற்போது நீராவியால் ஓடும் வண்டிகள் நிலக்கரியின் உதவியால் ஓடுகின்றன. இனி நிலக்கரிக்குப் பதில் பாதரசம் உபயோகிக்கப்படுமெனத் தெரிகிறது. பாதரசத்தை உபயோகிப்பதால் அதிக உஷ்ணம் உண்டாகிறதாம். நிலக்கரி உபயோகிப்பதை விட குறைந்த செலவே ஆகிறதாம். தொழிற்சாலைகளிலுள்ள பெரிய இயந்திரங்களுக்குத் தற்போது பாதரசம் உபயோகிக்கப்படுகிறது. இன்னும் சில வருஷங்களுக்குள் கப்பல்களுக்கும் உபயோகிக்கப்படும்.

கோடாங்கியால் குறை நீங்குமா?

(எஸ். கே. பி. முத்துராஜா)

மனிதர்கள் தங்களது வாழ்க்கையில் ஏற்படும் சம்பவங்களின் முடிவைத் தெரிந்துகொள்ள தாங்களே தங்களது பகுத்தறிவால் யூகித்துக்கொள்ளாமல், சுகாதாரக்குறைவால் சிலருக்கு நோய்வந்தால் உடனே கோடாங்கி (குறி) கேட்க எத்தனப்படுகிறார்கள். கோடாங்கிகள் தங்களது சுயகலத்தைக் கருதி அது இது என்று பலவாராகச் சொல்லிப்பணம் பிடிங்கிப் போகிறார்கள். இதல்லாமல் அக் கோடாங்கி புளுகியதற்கும் வீண்செலவு செய்திருக்கிறார்கள். கோடாங்கி சொல்லியபடி செய்தும் ஒரு பயனுமின்றி அவஸ்தைப்படுவதையும் காண்கிறோம். அப்படிச் சிலருக்கு வியாதி தீர்ந்ததென்றால் அவர் தின்ற மருந்தினால் தான் தீர்ந்திருக்கக்கூடும். இவர்கள் புளுகிய செய்கையால் தீர்ந்ததல்ல. (காக்கை உட்கார பனம்பழம் விழுந்தமாதிரிதான்)

ஒரு வியாபாரம் செய்வதற்கும் கோடாங்கி குறி கேட்கிறார்கள். இது தவறு. நாம் இது செய்யத்தகுந்த தொழில் இது நம்மால் செய்யமுடியாத தொழில், இதில் லாபமுண்டு இதில் லாபமில்லை என்று பகுத்தறிவைக்கொண்டு ஆராய்ச்சி செய்து தொழில் நடத்த வேண்டுமே யொழிய, கோடாங்கி குறி கேட்பதில் ஒருபயனுமில்லை. இதுபுத்திசாலித்தனமுமாகாது. சிலர்பட்டவனை (இறந்தவனை) வீட்டுத்தெய்வமாகவைத்துவணங்கவும் கோடாங்கிகேட்பதுண்டு. பட்டவனைவணங்கினால் குறை நீங்குமா? பழைய டஜன் கணக்கான தெய்வங்களை வணங்கியே ஒரு பயனுமின்றி இருக்கும்போது இந்த பட்டவன் (இறந்தவன்) என்ன செய்ய முடியும்? நன்றாய் யோசித்துப்பாருங்கள். பிரமையினால் தள்ளாதீர்கள். உணர்ச்சிக்கும்குற்றமானால் தள்ளிவிடுங்கள். இது வீண் செலவே ஒழிய வேறல்ல. (பட்டவனென்பது தனது சுற்றத்தாரில் விவாகமாகாத பெண்ணோ, ஆணோ இறந்தவர்களை மோசக்கார பக்கா சுயநல கோடாங்கியின் பேச்சைக் கேட்டு வீட்டுத் தெய்வமாக வணங்க ஏற்படுத்திக்கொண்ட ஒரு முழு

முட்டாளின் மூடப்பழக்க வழக்கம்) பட்டவன் தான் உனக்கு இவ்விதமான இடஞ்சலெல்லாம் செய்கிறான் ஆதலால் பட்டவனை வணங்கு என்று கூறி முப்பது,நாற்பது ரூபாய் வரை செலவும் சொல்லி விட்டு கிடைத்த வரையில் பணம் தட்டிப் போவான். ஜாக்கிரதை!

சிலர் திருட்டுப்போய்விட்டாலும் கோடங்கி கேட்ப துண்டு. கோடாங்கிகள் திருட்டுப்போன பொருள் வடக்கில் இருக்கிறதென்றோ உங்கள் வீட்டுக்குள்ளேயே உங்கள் சுற் றத்தார்கள் எடுத்திருக்கிறார்கள் என்றோ உண்மையைக்கூற முடியாமல் பலவிதமாக சாக்குப் போக்குச் சொல்லிவிட்டு கிடைத்தவரையில் பணம் பறித்துப்போவார்கள். உங்கள் பொருள் போனதல்லாமல் இதுவும் வீண் செலவு தானே என்று உங்களைக் கேட்கிறேன்.

ஏமாற்றுவதில் கைதேர்ந்து,மாந்திரீகர்என்றுவிளம்பரம் செய்துகொண்டிருக்கிற சில கோடாங்கிகள் நாளைவந்து மை போட்டுப் பார்த்து திருட்டைக் கண்டு பிடித்துத் தருகிறேன் என்று சொல்லிவிட்டு என்னென்ன பொருள் களவுபோயிற்று எங்கே வைத்திருந்தீர்கள் இன்னும் திருட்டுப்போன விஷய மாக பல கேள்விகள் கேட்டுவிட்டு மறு நாள் சென்று மை போட்டுப்பார்ப்பதற்காக பூஜைக்கு இருபது முப்பது ரூபாய் வரையில் செலவு சொல்லி யாவும் வந்த பின் ஒரு வெற்றிலை யில் அவனிடமிருக்கும் (வண்டி) மையைத்தடவி ஓராளிடம் கொடுத்துப் பார்க்கச்சொல்லுவான். அவர் ஒன்றும் தெரிய வில்லை என்றால் உங்களுக்கு மை ஓடவில்லை, யாராவது பையன்கள் இருந்தால் கூப்பிடுங்கள் என்று கூறுவான். ஒரு பையனை அழைத்து வந்து மை பார்ப்பார்கள். அவனும் ஒன் றும் தெரியவில்லை என்று உண்மையை உரைப்பான் (அந்த வெற்றிலையில் தெரிந்தால்தானே பையன் சொல்லக்கூடும்) இவனுக்கும் மை ஓடவில்லை என்று கூறி தெருவில் விளை யாடிக்கொண்டிருக்கிற ஒரு பையனைக் கூப்பிட்டு வாருங்கள் என்று சொல்லுவான்- அப்படியே அவர்கள் வெளியே போய் விளையாடும் பையன்களில் சிலரைக்கூப்பிடுவார்கள். முன் கோடாங்கியால் சொல்லி வைக்கப்பட்ட பையன் முதலில் வந்து நான் பார்க்கிறேன் என்று கூறிவிட்டு வெற்றிலையைக் கையில் பிடித்துக்கொண்டு பார்த்தவுடனே அப்பாடா! ஒரு குரங்கு வருகிறது. பயமாய் இருக்கிறது என்றுசொல்லுவான். முன் கோடாங்கி தனக்குச்சொல்லும்படி சொல்லிக்கொடுத்த

விஷயங்களை வரிசையாகச் சொல்லுவான். பிறகு கிருட்டுப் போனவிடம் பொருளின் பெயர் முதலியவைகளைச் சொல்லி விட்டு ஒரு பெண்பிள்ளை வருகிறாள். அவள்மே பொருளை எடுத்துக்கொண்டு போகிறாள். அவ்விடத்தில் இருட்டாய் இருக்கிறது. ஆளின்முகம் நன்றாய்த்தெரிடவில்லை ஒரு ஆண்பிள்ளை வருகிறான் இருவரும் ஒரு ரோட்டின் வழியாகப்போகிறார்கள் என்று சொன்னவுடனே ஐயோ! பயமாய் இருக்கிறது சூரங்கு பெரிதாய்த் தெரிகிறது, கையை ஓங்குகிறது, கடிக்க வருகிறது என்று பாசாங்கு செய்து அலறிக்கொண்டு வெற்றிலையைப் போட்டுவிட்டு ஓட்டம் பிடிக்க எத்தனிப்பான் உடனே கோடாங்கி அவன் கையைப்பிடித்துக் கொண்டு தப்பி பபப்படாதே அது அநுமார் தயவு செய்து முழுதும் பார்த்துச்சொல். உனக்கு ஐந்து ரூபாய் வாங்கித் தருகிறேன் என்று கூறுவான். பையன் எதற்கும் சம்மதியாதவன்போல் கடித்து வெளியேபோய்விடுவான்மோசக்காரகோடாங்கிதிருட்டுக்கொடுத்தவர்களைப் பார்த்து நானென்னசெய்வேன், முக்காலவாசி பார்த்தாய்விட்டது இன்றும் கால்வாசி இருக்கும்போது பையன் பயந்து விட்டான். காளைகுள்மை போட்டுப் பார்த்து நிச்சயமாய் திருட்டைப் பிடித்துக் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு முன்தான் பேசியபடி பணம் பெற்றுப்போவான். போனவன் அவனைப்பாக்க முடியாது பார்த்துக்கேட்டாலும் காளைக் கடத்துவான். வந்து மை பார்த்தாலும் முன் செய்தபடியே கடக்க ஒரு பையனை தயார் செய்துகொண்டு மை பார்ப்பான். ஆதலால் பகல் கொள்ளைக்காரர்கள் ஆகிய மாந்திரீகர், கோடாங்கி இவர்களிடம் நீங்கள் கெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபட்டுச் சம்பாதித்த பணத்தை வீணில் இழக்காதீர்கள். இப்படிச் செய்வது மதியீனமும் ஆராய்ச்சியின்மையுமேயாகும்.

திருட்டைக் கண்டுபிடிக்கும் சக்தி கோடாங்கிகளுக்கு இருந்தால் ஏன் இப்படி உடுக்கை எடுத்துக்கொண்டு ஊரூராய் அலைந்து அவதிப்பட வேண்டும்? அவனது ஊரிலேயே ஜம்மென்றிருந்துகொண்டு ஒரு C. I. D. உத்தியோகம் பார்ப்பானால் வருஷத்தில் எவ்வளவோ ரூபாய் கவர்மெண்டார் கொடுப்பார்கள். இதை எல்லாம் யோசித்தாவது கோடாங்கி மாந்திரீகர்களின் சூழ்ச்சியை அறிந்து கொள்ளுங்கள், அறியாதாருக்கு உரைத்து சூழ்ச்சியிலிருந்து தப்பவையுங்கள்.

சில கோடாங்கிகள் உன்னைக்கெடுக்க உன் பகையாளி உனக்கு பில்லி, ஏவல், சூனியம் வைத்திருக்கிறான் அதனால் தான் நீ கஷ்டப்படுகிறாய் என்று ஒரு வடிகட்டின புளுகு புளுகுவார்கள். இதை உண்மை என்று நம்பிபலபேர்கள் இதை எப்படியாவது நிவர்த்திக்க வேண்டுமென்று மாந்திரீக கோடாங்கிக்காரனைவேண்டுவார்கள். உனக்குக்கெடுதல் செய்ய உன் வீட்டில் மாந்திரீக தகடு பூமியில் வைத்திருக்கிறான் அதை எடுத்தாலதான் முடியுமென்று சொல்லிவிட்டு (சாமி) மலையேறிவிட்டது என்று தனது ஆவேசத்தை நிறுத்திக கொள்வான். மாந்திரீகத் தகட்டை எடுக்குப்படி கேட்டால் சரி என்று ஒப்புக்கொள்வான் அவனுக்கு தேவையான சாமான்களையும் இருநூதோ முப்பதோ ரூபாயும் வாங்கிக் கொண்டு மாந்திரீகத் தகட்டை எடுக்க ஒன்பது நாள் ஜெபம் செய்ய வேண்டுமென்று சொல்லி அவ்வீட்டிலேயே தங்கி இருந்து ஒரு பழய துருவேறின செப்புத்தகட்டில் ஷை வீட்டுக் காரரின் பெயரை எழுதி அதின் கீழ் அவ்வும், சவ்வும், கிலீயும் என்று எழுதி வைத்துக்கொண்டு மேற்படி வீட்டிலேயே புதைக்கப்பார்ப்பான். சொகரியப்படாவிட்டால்ஒன்பதாம்நாள் இரவில் மேற்படி தகட்டை வாயில் போட்டுக்கொண்டு இந்த இரவு மாந்திரீகத் தகட்டை எடுக்கிறேன். ஒரு கறுப்பு கிடாயும், ஒரு சேவலும், கள்ளும், முட்டையும், சாப்பீசும், பிரியாணியும் கொண்டுவரச்சொல்லி னை போட்டுப்பார்க்கும் பாவனையாகப் பார்த்து தகடுஇருக்கும் இடம் தெரிந்துவிட்டது போல் பாசாங்கு செய்து அவனுக்கு பிரியமான இடத்தில் ஆட்டுக்கிடாயை வெட்டச்சொல்லி அவ்விடத்தில் பூமியை வெட்டச்சொல்வான். இவன் கோவணத்துடன் இருந்துக் கொண்டு பிறர் கப்புபடியாக குளித்துவிட்டு அவர்கள் கொடுக்கும் புது வேஷ்டியை உடுத்திக்கொண்டு பித்தனைப் போல் பிதற்றிக்கொண்டிருப்பான். அவர்கள் குழியை வெட்டிப்பார்ப்பார்கள். அவ்விடத்தில் தகடு இருந்தால்தானே அகப்படும்? இவன் வாயினுள் தகடு இருக்கும்போது அங்கே எப்படி இருக்கமுடியும்? அவர்கள் தகடு இல்லை என்பார்கள். அதற்கு இந்த அயோக்கிய கோடாங்கி ஒரு குடம் தண்ணீர் கொண்டுவரச்சொல்லி தனது புதுவேஷ்டியை அவிழ்த்து வைத்துவிட்டு ஒரு பழைய துண்டை உடுத்திக்கொண்டு தண்ணீரையும் தலையில் ஊற்றிக்கொண்டு கானே வந்து தகட்டை எடுக்கிறேன் என்று சொல்லிக்கொண்டே ஆடிவிழுந்து குதித்துப்போய் பலவித ஏமாற்று வித்தைகள் செய்து முடிவில் வாயில் இருக்கும் தகட்டை குழியில் ஜாக்கிரதையாய்

பிறர் காணாதபடி துப்பி அதை உடனே கையால் அமுக்கிக் கொண்டு எங்கே இன்னும் அடியில் போகப்பார்க்கிறாய் என்றுசொல்லிக்கொண்டு வேண்டுமென்றே பூமியினுள் கையை அழுத்துவான் விரைவில் வாருங்கள் பலி போதவில்லை சேவலை அறுத்து ரத்தத்தை குழியில்விடுங்கள் சீக்கிரம்! இல்லாவிட்டால் இந்தத்தகடு பூமியினுள் ஓடிப்போகுமென்று கூறி இவன் சொன்னபடி கடந்தபின் மண்ணோடு தகட்டையும் சேர்த்து எடுத்துக் காண்பித்து வேண்டியவரையில் பணம் கட்டிப்போவான். ஆதலால் கோடாங்கி மாந்திரீக தகட்டு விஷயங்களில் ஜாக்கிரதை! ஏமாந்து போகாதீர்கள்.

கோடாங்கி சொன்னவுடன் நீ சொல்வதில் சம்சயம் ஏற்படுகிறது என்று யாராவது கேட்பாராகில் உடனே கோடாங்கி நீங்கள் நம்புப்படி ஒரு திருஷ்டாந்தம் காட்டுகிறேன் என்று சொல்லி நூறுபொட்டணம் வெள்ளைப்பூவும், ஒரு பொட்டணம் சிகப்புப் பூவும், அரளிப் பூவினால் கட்டி இவ்விரண்டையும் கலந்து ஒரு தட்டில் வைத்து மந்தையில் (குறிசொல்லும் இடத்தில்) வையுங்கள். நான் உடுக்கை அடித்து சாமியை அழைத்து சிகப்புப்பூ பொட்டணம் ஒன்றை மட்டும் எடுத்துக் காண்பிக்கிறேன என்று அறை கூறுவான். சரி என்று ஒப்புக்கொண்டு அதன் படி பூவை ஒரு தட்டில் நிறப்பிவைத்தால் இந்த ஏமாற்றும் கோடாங்கி முன்னதாகவே ஒரு சிகப்புப்பூ பொட்டணம் தயார் செய்து வைத்திருப்பான். அதை உளளங்கையில் வைத்து மறைத்துக் கொண்டு உடுக்கைத் தட்டி ஆவேசம் கொண்டு தட்டிலிருக்கும் பூ பொட்டணத்தை எல்லாம் இறைத்தபின் இவன் கையில் முன்னதாக வைத்திருந்தசிகப்புப்பூ பொட்டணத்தை காண்பித்து ஏமாற்றுவான். கோடாங்கி கேட்கும் வழக்கத்தை ஆழக் குழிவெட்டிப் புதையுங்கள்.

சில கோடாங்கிகள் வெள்ளி அல்லது செவ்வாய்க்கிழமை தோறும் உடுக்கை அடித்து கேட்ட குறி சொல்லுவதாக விளம்பரம் செய்துகொண்டு, தனக்கு உளவாளியாக இரண்டொருவரை நியமித்துக் கொண்டு இவர்களை மத்தியஸ்தர்களாக வைத்துக்கொண்டு குறி சொல்லுவார்கள். உடுக்கை அடிப்பவன் சொல்ல முடியாமல் மயங்கும்பொழுது உளவாளிகள் ஜாடையாக அறிவிப்பார்கள். அதை அறிந்து கோடாங்கி கேட்ட குறியை சொல்லிவிடுவான். கோடாங்கிகள் "கோடாங்கி மாலை" என்னும் புத்தகத்தில் உள்ளதை

மனப்பாடம் செய்து கொண்டும் சமயோசிதமும் கையால் ஜாடையும் பார்த்தும், குறி கேட்பவர் முகச்சாடையும், அவர் கள் கேட்கும் வார்த்தைகளிலிருந்தும் முக்கியமாக அவ் வீட்டிலுள்ள பெண்களின் வார்த்தைகளிலிருந்தும் குறி சொல்லும் இடத்தில் பலர் இக்குறி விஷயமாக பேசிக்கொள் ளும் வார்த்தையிலிருந்தும் குறி சொல்லியும், குறி சொல்லிக் கொண்டும் வருகிறார்கள்.

சில கோடாங்கிகள் மாந்திரீகத் தகடு தருகிறேன், நோய் களைப் போக்குகிறேன், பிள்ளை வரம் தருகிறேன் என்று சொல்லி போதைப் பெண்களை தனி அறையில் வைத்து மாந்திரீகம் செய்து ஓட்டி விடுகிறேன் என்று சொல்லி சில அயோக்கியகோடாங்கிகள் பெண்களின் கற்பைக் கெடுப்பதும் உண்டு. நம்மவர்கள் யார் எதைச் சொன்னாலும் நம்பி மோசம் போகிறார்கள். காரணம் போதுமானகல்வியின்மையும் ஆராய்ச்சியின்யுமேயாகும். சில வருஷங்களுக்கு முன் காரா யண மூர்த்தி வடக்கே வெகுதூரத்திற்கு அப்பாலே பிறந் திருக்கிறார் என்று விளம்பரம் செய்தார்கள். இந்த துண்டுப் பிரசுரத்தைப் பார்த்தோர் இதுமாதிரி கையினால் இருபது துண்டுப் பிரசுரங்கள் எழுதி வெளியிட வேண்டுமென்றும், அப்படி வெளியிடாது போனால் காராயண மூர்த்தி கோபத் திற்கு ஆளாக வேண்டுமென்றும் ஒரு வடிகட்டிய முழுப் பொய்யை பிரசுரம் செய்து பொதுமக்களை ஏமாற்றினார்கள். சில ஆராய்ச்சியற்றவர்களும் அவர்கள் வெளியிட்டமாதிரி கையால் எழுதியும், அச்சுப் போட்டும் வெளியிட்டார்கள். அதுசமயம் காணும் கையால் இருபது துண்டுப் பிரசுரங்கள் எழுதியவன் தான் என்பதையும் வெட்கத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இத்தனை வருஷங்களாகியும் என் அந்த காராயண மூர்த்தி பொதுமக்களுக்கு பிரசன்னமாகவில்லை என்று உங்களைக் கேட்கிறேன். அது சமயத்தில் கிராமங் களில் ஒவ்வொரு வீட்டின் கதவுகளின் மேலும் காமம்போட்டு வந்தார்கள். என்னே இவர்களின் மதியீனம்! அதன் பிறகு திருச்சி காவேரி வடகரையோரமாய் உள்ள கிராமங்களில் "ஏழுபிள்ளைத்தாச்சிவருகிறாள் உங்கள் பிள்ளைகளை வெளி யில் விடாதீர்கள்" என்று ஒரு முழுப் பொய்யை சில சுயநய கலமிகள் சொல்லி கிராமத்தார்களை பயமுறுத்தி இரண்டு மூன்று மாதங்கள்வரை ஒவ்வொரு வீட்டிலும் வேப்பிலையை சொருகி பீதியோடு இருக்கச்செய்தார்கள். ஏழு பிள்ளைதாச்சி யார்? என் வருகிறாள்! வந்தால் என்ன? என்று ஆராய்ச்சி

செய்திருந்தால் மரத்தில் இருக்கும் வேப்பிலை ஒவ்வொரு வீட்டிலும் இருக்க இடமும், திகிலும் இல்லாது போயிருக்கும.

யார் எதைக் கூறினாலு ஆராய்ச்சி செய்து பாருங்கள். மூடமதியினால் நம்பிவிடாதீர்கள் இப்படி நம்பி நம்பித்தான் நாமும் நமது நாடும் இப்படி இருக்கிறோம். சுயநலக்காரர்களின் சூழ்ச்சியில் அகப்படாதீர்கள், மோசக்கார கோடாங்கிகளை நம்பி மோசம் போகாதீர்கள். அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சியுமில்லாதவர்கள்தான் தெய்வம் வந்துவாங்கொடுக்கிறதென்றும், நோயைத் தீர்க்கிறதென்றும் மூடநம்பிக்கை கொண்டுள்ளார்கள். நாள் சொல்லச் சொல்ல அவர்களோ சுயநலக்காரர்களின் சூழ்ச்சியை அறிந்துகொண்டு மூடப்பழக்க வழக்கங்களை விலக்கக்கூடும். இப்பொழுது சொன்னால் அவர்கள் காதில் ஏறவாபோகிறது.

நீண்ட பிரசங்கங்களைத் தடுக்க மின்சார இயந்திரத்தின் உதவி.

சில சங்கக் கூட்டங்களில் பிரசங்கிகள், தங்கள் பேச்சை மற்றவர்கள் சுவாரஸ்யமாகக் கேட்கின்றார்களா, இல்லையா என்பதைக் கவனியாமலே வழுர வழுர வென்று கொட்டிக் கொண்டேயிருப்பார்கள். பேச்சு ரஸமாக இல்லாவிட்டாலும் கூட்ட மத்தியில் எழுந்து போவது உசிதமல்ல வென்று பலர் மனக் கஷ்டத்துடனிருந்து தொலைக்க நேருகிறது. இந்தக் கஷ்டத்தினின்று நிவர்த்திபெற கென்டி (இங்கிலாந்து) லுள்ள பல கிளப்புகளும் பொது மண்டபங்களும் ஒரு மின்சார யந்திரத்தை அமைத்திருக்கின்றன. இதன் மூலம் எந்தப் பிரசங்கியும் பத்து நிமிஷ நேரத்துக்குமேல் பேசமுடியாது. ஒரு பெரிய முகம் செய்து அதில் நீளமாகத் தொங்கும் நாக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. பேச்சு ஆரம்பமானதும் நாக்கும் சிறிது சிறிதாக வெளியே நீண்டுகொண்டேயிருக்கின்றது. 10 நிமிஷத்துக்கு மேலும் பிரசங்கி நீட்டிக்கொண்டே போனால் லைட்டுகள் தாமாகவே அணைத்து மண்டபம் முழுவதும் இருட்டாய், விடுமாம் கூட்டத்தை விட்டு வெளியே போக விரும்புபவர்கள் யாரும் கவனிக்காத முறையில் தாராளமாகப் போகச் சவுகரியம் இதனால் ஏற்படுகிறது.

சிறு கதை.

பாகற்கனவு.

(நீலாம்பாள்)

"தினந்தோறும் இரவு வந்துவிட்டால் உனக்கு ஏதாவது ஒரு நோய் வந்துவிடுகிறது. ஆமாம், உண்மை நோயாயிருந்தால் அப்படி வாது. பொய் நோய் தானே! அது வேண்டும்போதெல்லாம் வந்துவிடுகிறது. உன்னைச்சொல்லி என்னபயன்? நீ நிரம்பப்படித்தவள், மகா புத்திசாலி! நான் மடையன். அப்படித்தானே உன் நினைப்பு? இல்லையா? இதைக்காட்டிலும் மனிதனுக்கு வேறென்னதானிருக்கிறது உலகில். இந்த ஆசையையும் தலைமுழுகிவிட வேண்டுமா?" என்று சிறிது கடுமையும், பரிதாபமும் கலந்த குரலில் கூறினார் சொக்கலிங்கம்.

"ஆமாம்! உலகில் இதைக்காட்டிலும் மனிதன் இன்பமடையும் வேறு காரியமேயில்லையா? எல்லாரும் இப்படித்தான் பெண்ணாசையும், பிள்ளைப் பைத்தியமும் பிடித்து அலைகிறார்களா? நம்முடைய அந்தஸ்திற்கும், வருமானத்திற்கும் இந்த இரண்டு குழந்தைகளே போதும், இன்னும் நம் தலையில் காமே பெருஞ்சுமையை ஏற்றிக்கொண்டு தவிக்கவேண்டுமா? இருக்கும் குழந்தைகளையே அவர்களின் பிற்காலத்தில் கவுரவமாகவும், பகுத்தறிவுடனும், வாழும் வகை செய்து விட்டால் போதுமானது. நமது சக்தி இதற்கே போதுமா? போதாதா? என்ற நிலையிலிருக்கும்போது மேலும் மேலும் பாரத்தை அதிகப்படுத்திக் கொள்வதென்றால் அது அறிவீனமல்லவா? எனவே இனி நாம் நமக்காகவன்றி குழந்தைகளுக்காகத்தான் வாழ்பவர்களாயிருக்க வேண்டும். அவர்களின் நன்மைதான் நமது இன்பம், நமது லட்சியம், பெருமை, எல்லாம்! இதைத்தான் நான் விரும்புகிறேன். உங்களுக்கு இஷ்டமானால் இத்திட்டத்தின் படி நடந்துக் கொள்ளுங்கள். இல்லையானால் என்னை பாதிக்காத முறையில் உங்கள் இஷ்டப்படியெல்லாம் நடந்துகொள்ளுங்கள். நான் குறுக்கிடவில்லை. என்னைப் பொறுத்தமட்டில் உயிர் உள்ளவரைக்கும் குழந்தைகளுக்காக உழைத்துவிட்டு உயிர்

துறப்பதென்று தீர்மானித்து விட்டேன். அந்த தீர்மானத்தி னின்றும் நான் பிறழப்போவதில்லை. எதற்கு வீண்வாதம்!" என்று தன்னையறியாத வேகத்திலே படபடவென்று கூறுவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் தன் அறைக்குள் சென்று படுத்துக் கொண்டாள் விசாலம்.

அவள் இருதயத்திலே ஏதோ ஒரு அருமையான, துணிகர மான காரியத்தைச் செய்து வெற்றியடைந்ததைப் போன்ற நினைவும், உணர்ச்சியும், சாந்தியும் நிலவின. ஆனால் சொக்க லிங்கம்? அவர் நிலைமைதான் கவலைக்கிடமானதாயிருந்தது. விசாலத்தின் அந்த மூடிவான பதிலும், பேசின தோரணையும், கண்டிப்பும், சொக்கலிங்கத்தைத் தூக்கிவாரிப் போட்டன. அவர் அறிவு குழம்பியது. என்ன சொல்வது, என்ன செய்வது என்பதே அவருக்குப் புரியவில்லை, விசாலத்தின் தாய் வீட்டு பூஸ்திதியிலிருந்து மாதந்தோறும் அவளுக்கு 25 ரூபாயுக்குக் குறை யாமல் வருவாய் கிடைத்து வருகிறது, ஆயுள்வரை கிடைக்கவும் செய்யும், அது சொக்கலிங்கத்திற்கு ஒரு பெரிய அனுகூலமா யிருந்து வந்தது. மேலும் சோற்றுக்காகவோ, துணி மணிகளுக் காகவோ விசாலம், கணவன் கையை எதிர்ப்பார்க்கும் நிலைமை யில் இல்லை. எனவே அந்த விஷயமாக விசாலத்தைத் துன் புறுத்தவோ, பயமுறுத்தவோ வழியில்லை. ஆகவே அவளு டைய அபிப்பிராயத்தை, திட்டத்தை கட்டாயமாக ஆமோதிக் கும் நிலைமைக்கு ஆளாகிவிட்டார் சொக்கலிங்கம்! வேறு வழியில்லை.

2

சொக்கலிங்கமும், விசாலாட்சியும் இந்துசமூக வழக்கப்படி பெற்றோர்களின் விருப்பத்தை அனுசரித்து தம்பதிகளானவர் கள். அழகு, குணம், அறிவு, கல்வி, வயது முதலிய ஒவ்வொரு அம்சங்களிலும் தம்பதிகளுக்குள் மடுவுக்கும் மகாமேருவுக்கு முள்ள ஒற்றுமைதான்! கிறிக்கும் பாம்புக்குமுள்ள நேசபான்மை தான்! ஆம்! விசாலம் சொக்கலிங்கத்தின் இரண்டாவது மனைவி!

விசாலம் அன்பு நிறைந்த உள்ளமும், அளவுக்கு மிஞ்சிய சபிப்புத் தன்மையும், நிதானமும் வாய்ந்தவள். ஆகவே அவ ருடன் ஒருவாறு ஊமை ராஜா விளையாட்டைப்போல வாழ் கையை கடத்திவந்தாள். இந்த நான்கு வருடகாலங்களில் அவ

எது வாழ்க்கையிலே இன்பம் என்பது முயற்கொம்புதான். ஆயினும் இந்த நினைவுமயிலுங்கூட ஆணும் பெண்ணுமாய் இரண்டு குழவிகள் அவர்கள் வீட்டில் சஞ்சரிக்கின்றன. விசாலம் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாள்.

ஆ! எத்தனை நாளைக்குத்தான் தன்னலங்கருதாமல் பிறருக்காக மனமொவ்வாத துன்பவாழ்வில் ஈடுபட்டுக்கிடக்க முடியும்? விசாலம் இந்த ஊமை ராஜா விளையாட்டையும் பகிஷ்கரித்துவிட விரும்பினாள். இன்பத்தைப் பெறாவிட்டாலும் போகிறது, துன்பம் வராமலாவது இருக்கவேண்டும் என்பது தான் அவள் நோக்கம். அன்று காலையில் ஒரு பத்திரிகையில் அவள் படித்த "கர்ப்பத்தடையின் முக்கியம்" என்ற ஒரு கட்டுரையே அவளுக்கு அந்த தைரியமும், ஊக்கமும், துணிகரமும், கொடுத்தது. அதன் பயனாய்த் தன் மனதில் எழுந்த எண்ணத்தின் முடிவை வெகுதுணிச்சலுடன் கணவனுக்குச் சமர்ப்பித்து விட்டாள் விசாலம்.

அந்த இன்பமறுப்புத் திட்டத்தை கிரியாம்சையில் கொண்டுவர சொக்கலிங்கத்தால் சாத்தியப்படவில்லை. எனவே ஏதாவது சாக்குப்போக்குகள் சொல்லிக்கொண்டு அடிக்கடி வெளியூர்களுக்குச் சென்றுவிடுவார். எத்தனையோ காரணங்களால் நிம்மதியின்றித் தவிக்கும் பெண்களிடம் அவர் தன் இரவை நிம்மதியாகக் கழித்துவந்தார்! இதனை விசாலம் மறுப்பதில்லை.

இளமையும், அழகும் பொருந்திய விசாலத்தின் கதியென்ன? அவள் இதயம் இன்பத்தை விழைகின்றது. ஆனால் சொக்கலிங்கத்தின் கூட்டுறவைக் கட்டோடு வெறுக்கின்றது. எனவே அவள் பாலயோகினியாக மேலும் இரண்டாண்டுகளைக் கழித்தனள்.

3

வேணுகோபால் சொக்கலிங்கத்தின் ஒன்றுவிட்ட சகோதரன் மிகுந்த அழகன். நல்ல படிப்பாளி, சொக்கலிங்கம் குடியிருக்கும் ஊருக்கு எட்டாவது மைலில் உள்ள கண்டபுரத்திலுள்ள "பொதுநல வாசகசாலைக்கு வேணுதான் பொருப்பாளி. பொதுக்காரியங்களில், பொதுஜன முன்னேற்றத்தில் அவனுக்கு மிகுந்த அக்கறையுண்டு.

விசாலம் ஓய்வு நேரங்களில் அந்த வாசகசாலையினின்று புத்தகங்களும், பத்திரிகைகளும் வரவழைத்துப்படிக்கத் தொடங்கினாள். அவைகளில் மிளிரும் சமுதாய சீர்திருத்தக் கட்டுரைகளும், புரட்சிக்கருத்துகள் நிறைந்த கதைகளும் அவள் மனதை கவர்ந்தன. வேணுவும் கன்றாக எழுதக்கூடியவன். சில சமயங்களில் அவனுடைய கட்டுரைகளும், கதைகளும் பத்திரிகைகளில் வரும். அவைகளைப் படிப்பதில் விசாலத்திற்கு ஒரு தனிப்பிரியம்! அந்தப்பிரியம் காளடைவில் வேணுவின் பால் கொண்ட காதலாகப் பரிணமித்தது. ரஸிகத்தன்மை நிறைந்த அவளுடைய இளம் இதயத்திலே வேணு சுலபமான இடம் பெற்றுவிட்டான். பத்திரிகைகளைச் சாக்கு வைத்துக்கொண்டு அடிக்கடி வேணுவுக்கு கடிதம் எழுதத்தொடங்கினாள். அவனும் பதில் விடுப்பான். விசாலத்தின் அழகும், குணமும், அவளது பரிதாபகரமான வாழ்வும் வேணுவின் மனதில் பச்சாத்தாபத்தை மேலுப்பி அவனை அவளுடைய காதலுக்கு இரையாக்கிவிட்டன. அவர்கள் கடிதத்துவரைக் காதலர்களாகிவிட்டனர். பல சமயங்களில் நேரிலும் சந்தித்தனர். ஆனாலும் அவர்கள் வாம்பு கடந்து செல்லவில்லை. என்றாலும் அவர்கள் சந்தித்த ஒவ்வொருமுறையும் அளவுகடந்த காதலை உள்ளத்தில் ஏற்றிவண்ணமே பிரிந்தனர்.

சில சமயங்களில் விசாலம் "தன் அன்பு செல்லும் வழி தவறு" என்பதை உணர்ந்து தன் செய்கையை வெறுப்பாள். வேணுவின் மனைவிக்கு துரோகம் செய்யலாமா? என்று வருந்துவாள். எனினும் வேணுவின்மேல் கொண்ட அன்பை மீட்கும் சக்தியைப் பெற்றாளில்லை.

சொந்த மனைவியிருக்க மற்றொரு மாதை நேசிப்பது அடாத செய்கை யென்பதை வேணுவின் மனம் அவனுக்கு அறிவுறுத்தாமலில்லை. எனினும் அவன் அந்தரங்க வினைழுவும், அவளுடைய அன்பின் வேகம் அவனை அடிமை கொண்டன.

4

அன்று மாசிப் பௌர்ணமிதினம். மாலை 7-டணியிருக்கும். சந்திரன் தன் கீழ்த்திசையிலே முழு வன்மையுடன் பொற்கதிர்களை வாரியிறைத்துப் பொங்கி பெழுந்துகொண்டிருந்தான். குளிர்ந்த காற்று வீசிற்று.

அந்த மாடியின் பின் முற்றத்திலே "மாலை வருகிறேன்" என்ற வேணுவின் கடிதத்தை கையில் வைத்தவளாய்ச் சந்திரனை நோக்கியவண்ணம் நின்றுகொண்டிருந்தாள் வனிதை விசாலம். அவள்மனம் இடற்பையுழகில்சென்றுலயித்திருந்ததெனினும், "இச் சமயத்தில் அவன் என்னருகிலிருந்தால்!" என்று நினைக்கும் பொழுது அவள் உள்ளமும், உடம்பும் தளர்லாய் எரிந்தன. காதல் கனைந்தன!

சிறிது நேரத்தில் யாரோ மாடிப்படியில் ஏறிவரும் ஓசை கேட்டது. மிகுந்த ஆவலுடன் அப்பக்கம் திருப்பினாள்— வேணு!

விசாலத்தின் மனதில் தோன்றிய மட்டற்ற மகிழ்ச்சியும், குதூகலமும் பொங்கி மலர்ந்தன அவள் வதனத்திலே. அபாரமான அன்புகாட்டி அவனை வரவேற்றாள் வனிதை.

"என்ன வேணு! மணி ஏழுக்குமேலாய் விட்டதே, சாபங் காலமே வந்திருக்கப்படாதா? நீ வரும் வழியைப்பார்த்துப் பார்த்து என் விழிகள் பூத்துவிட்டன" என்றாள் விசாலம்.

"புறப்படுவதற்கே மணி 6-ஆகிவிட்டது. எங்கே அண்ணா வைவில்லையா? குழந்தையளைக்கூடக் காணோமே!" என்று வினவினான் வேணு.

"பக்கத்து கிராமத்தில் சிவன் கோவிலில் ஏதோ உற்சவமாம். அவர்தான் கடவுள் பித்து பிடித்தவராயிற்றே! குழந்தைகளையும் அங்கு கூட்டிக்கொண்டு போயிருக்கிறார். காலையில் தான் வருவார்கள். நீ மொய்ப நேரத்துக்கு முன்பே வந்துவிடுவையென்று நினைத்தேன். போகட்டும் இவ்வளவு தயவாவது வைத்திருக்கிறாயே அதுவே போதுமான து" என்று கூறினாள் விசாலம்.

"என்ன செய்வது? வீட்டைவிட்டுக் கிளம்புவதென்றால் கேவில் இல்லை. பல தொந்தரவுகள், மறுக்கமுடியாத முக்கிய அலுவல்கள், போதாக்குறைக்கு என் மனைவியின் சந்தேகக் கேள்விகள். இவைகளையெல்லாம் சரிப்படுத்திவிட்டு வருவதென்றால் அப்படி முடிகிறதா? சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால் தப்பில்லை யென்று அர்த்தமா என்ன?" என்றான் வேணு.

"மனைவியின் சந்தேகக் கேள்விகள்"

இவ்வார்த்தை விசாலத்தின் இருதயத்தை வாள்கொண்ட றுத்தது. "ஐயோ! நான் பாபி! மகா துரோகி! வஞ்சகி!" என்று லறியவளாய் கீழே சாய்ந்து விட்டாள் விசாலம். வேணு பதறிப்போய்விட்டான்.

அவள் சுயவுணர்வு பெற்று கண்விழிக்கும்போழுது தான் வேணுவின் மடிமீது அவனது அணைப்பில் கட்டுண்டு கிடப் பதை யுணர்ந்தாள். அவளது உள்ளமும் உடலும் ஒருங்கே சிலிர்த்தன. "அந்தோ! வேணு! என்னைத் தீண்டாதே! உன் மனைவிக்குப் பெரிய துரோகமும் உனக்குப் பெரிய அபகீர்த் தியும் தேடிய சண்டாளி நான். என்னைவிட்டுவிடு" என்று படபடப்புடன் கூறியவளாய் அவன் பிடியினின்றும் விடுபட முயன்றாள் விசாலம்.

அமைதியுடன் வேணு கூறினான். "விசாலம்! எதற்காக நீ இவ்வளவு துக்கப்பட வேண்டும்? வீணாக உன் மனதை யலட்டிக்கொள்கிறாய். நீ யாருக்கும் துரோகம் செய்யவில்லை. நான் சொல்லுகிறேன். இதோ இப்படியே என் மடியில் படுத்த வண்ணம் கேட்பாயாக.....எதற்காக உன் உடம்பு இப்படி நடுங்குகிறது? தைரியமாயிரு. இதோ என்னைப்பார்....." என்று அன்புடன் அவளை வாரியணைத்துத் தன் மடியில் வைத் துக்கொண்டான்.

தன் வாழ்நாட்களிலே ஒரு நாளும் கண்டறியாத அந்தப் புதிய இன்பத் தேன் குடத்தில் தன்னைபறிபோமல் மூழுகி முழுகித் திளைத்தாள் அந்த யுவதி. சற்று முன்கொண்ட துன்பமும், பயங்கரமான நினைவுகளும், பீதி யும் சூரியன் முன் பனிபோலப்பறந்தன. அவள் உள்ளத்திலே இன்ப உணர்ச்சி நிறைந்து வழிந்தது. வதனத்திலே புன் முறு வல் தவழ்ந்தது. இதனைக்கண்ட வேணுவின் அகமும், முகமும் மலர்ந்தன.

மீண்டும் வேணு கூறினான் "ஒரு ஆணும் பெண்ணும் மனதாரக் காதலிப்பார்களானால் அவர்கள் கூடிச்சுகிப்பதில் தவறொன்றுமில்லை உண்மையான காதலர்கள் தான் சகிபதி களாக வாழவேண்டியவர்கள். ஆனால் தற்கால சமூதாயச் சட் டம் காதலைக் கொலைசெய்கிறது. காம் கண்மூடி வழக்கத்திற் கும், அநியாயத்திற்கும் தான் பயப்படுகிறோமே யொழிட

நியாயத்திற்கன்று. நாம் சுதந்திர தேசங்களான ரஷியாவிலோ, பிரான்சிலோ, ஐப்பானிலோ பிறந்திருந்தால் இந்தச்சிறு கவலையும் நம்மை யணுகாது. தற்போது நமக்கு வேண்டுவது "விடுதலை" மறுமண உரிமை, மாதர் சுதந்திரம், அதற்கு நாம் வழி காட்டிகளாக இருப்போமே! உன் அச்சத்திற்கு இணங்கினால் நாம் காதலுக்குத்தான் துரோகம் செய்தவர்களாவோம்!" என்று அவளை இருகப்பற்றி யணைத்து அவள் செவ்விய அதரங்களை ருசித்தான் வேணு. அந்த இளம் சன்யாசினி, இல்லற இன்பத்தை மறுத்து வெறுத்த விசாலம் ஒரேடியாக நான்காவது டியிலிருந்து இரண்டாவது படிக்குத்தாவி இன்பவெள்ளத்திலே இரண்டறக் கலந்துவிட்டாள்! இருவரும் தம்மை மறந்தனர்.

5

மாதங்கள் இரண்டு கடந்தன. விசாலத்தின் அகத்திலே இன்பமும் துன்பமும் மாறிமாறி எழுந்து மகிழவும் கலங்கவும் செய்துகொண்டிருந்தன. அன்று வேணு சொல்லிய விவாக விடுதலை, மாதர் சுதந்திரம், மறுமண உரிமை எல்லாம் அவள் மனதில் பதிந்துப்போயின. ஆனால் தன் கண வனையும், தான்பெற்றக் குழந்தைகளையும பார்க்கும்போது அவள் மனம் பெரிதும் வேதனையடைந்தது "குழந்தைகளின் எதிர்கால நன்மைதான் தமது லட்சியம், நமது இன்பம், நமது பெருமை" என்றெல்லாம் கனவனிடம் சொல்லியது அவள் ஞாபகத்திற்கு வந்தது, சே! சே! நாம் பெரிய தவறு செய்துவிட்டோம். நமக்கு என்ன இன்பம் வேண்டியிருக்கு!" என்று அவள் மனம் அவளை இடித்தது. என்ன செய்வதென்று தோன்றாமல் விசாலம் தத்தளித்துக்கொண்டிருந்தாள். அவள் மனதில் சாந்தியில்லை!

இந்த நிலையில்தான் வேணுவிடமிருந்து அந்த அழைப்புத்தாள் கிடைத்தது. நல்ல கடுப்பகல், வெய்யில் தெருப்பாக எரிகிறது, மாடியில் போட்டிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம் அதை மூன்றாவது முறையாகப் படித்தாள் விசாலம்.

"அன்பே! என் குழந்தை ராமுவின் வருடப்பூர்த்தி விழாவுக்கு ஏற்பாடு செய்துள்ளேன், விருந்து, கேளிக்கை எல்லாம் உண்டு. ஆனால் உன்வரவு தான் விழாவை

யும், என் மனதையும் பூர்த்தி செய்யும் என்று எதிர்ப் பார்க்கிறேன்''

உனது வேணு.

அங்ஙனமே விசாலம், குழந்தைகளுடனும், கணவன் சொக்கலிங்கத்துடனும் கண்டபுரம் சென்றாள். வேணு சற்று பணம் படைத்தவன், எனவே விழாவின் அமோகம் சொல்லும் தரமன்று, ''வெகு விமரியுடன் கடந்தேறிற்று'' என்றால் அதனை ரத்னச் சுருக்கமாக குறிப்பிடுவதாகும்.

அன்றுமாலை 6-மணி யிருக்கும். வேணுவின் வீட்டுப் பின்புறத்தோப்பிலே ஓங்கி வளர்ந்துள்ள நறுமலர்ச்செடிகளுக்கிடையிலே விசாலம் நின்றுக்கொண்டிருந்தாள். அவள் இதயம் பலத்த யோசனையில் ஈடுபட்டிருந்தது. அச்சமயத்தில் கமலம்—வேணுவின்மனைவி ''என்ன விசாலம்! தனியாக நின்றுகொண்டிருக்கிறாய்? முகம்கூட வாடியிருக்கிறதேனன்? என்ன சமாச்சாரம்?'' என்று கேட்டவண்ணம் அங்குத் தோன்றினாள்.

''ஆ! பிச்சைக்காரிக்கு வாட்டமில்லாமல் சந்தோஷ மிருக்குமா?'' என்றாள் விசாலம்.

''என்ன! பிச்சைக்காரியா? நீயென்ன செய்வாய் உன் தாய்வீட்டு வருமானத்தின் பெருமை உன்னை அப்படிச் சொல்லச் செய்கிறது'' என்றாள் கமலம்.

''காசு பணம் பிச்சை யெடுத்தால் தான் பிச்சையா? ஒரு வகையில் நான் பிச்சைக்காரியே, எனக்குப் பிச்சையிட்டவனும் இடுபவனும் நீயே!''

''விசாலம்! என்னென்னமோ பேசறே, எனக்கும் ஒன்றும் புரியவில்லையே, சற்று விளக்குகிற மாதிரி தான் சொல்லேன்''

''என்னை மன்னிப்பாயா?''

''மன்னிப்பதாவது, அப்படி யென்ன நீ செய்து விட்டாய்? சரி எதுவாயிருந்தாலும் மன்னிக்கிறேன் சொல்லு''

மிகுந்த ஈனஸ்வரத்தில், கதுங்கிய குரலில் விசாலம் கூறினாள்:- ''கமலம்! நான் ஒரு பெரிய தவறு செய்துவிட்டேன்.

அதை உன்னிடம் சொல்லாமலிருக்க என் மனம் இடந்தர வில்லை. நான் உன் கணவனை நேசித்தேன். அவரும் என் பரிதாபம் கொண்டார். இணங்கியும் விட்டார், நாங்களிருவரும் விவாகரத்து செய்துகொண்டு கணவனும் மனைவியுமாக வாழ நினைத்தோம். ஆனால் என்மனம் என்னவோ யார்யாருக்கோ துரோகம் செய்வதாக சதா என்னை உறுத்துகிறது, தைரியமில்லை, சாந்தியில்லை, உன் மன்னிப்புத் தான் இப்பொழுது எனக்கு வேண்டும். இல்லையேல் என் நெஞ்சு வேகாது. எங்களிருவரையும் மன்னிப்பாயா?''

''என்ன விசாலம்! என் கணவர் காட்டிய அவ்வளவு இரக்கத்தை நான் காட்ட அருகதையற்றவளா? உண்மையிலே சொல்லுகிறேன், நீ ஆச்சரியப்படவேண்டாம். பெண்ணுக்குப் பெண் இரங்காவிடல் பெண்ணுலகம் மாய்ந்தொழிவதே மேல். உங்கள் இருவர் நட்புடனும், என்னுடைய நட்பும் கலந்தொழிவதே மேல். உங்கள் இருவர் நடபுடனும், என்னுடைய நட்பும் கலக்கட்டும். மூவரும் ஒருங்கே மகிழ்ச்சியுறுவோம். முழுமனதுடனே சொல்லுகிறேன். சிலநாட்களுக்கு முன்பே உனது திருப்தியற்ற டாம்பகரமான வாழ்க்கையைப்பற்றி எனக்குத் தெரியும், அதற்காக வருந்தியுமிருக்கிறேன். இன்று என் கணவரே உன் மகிழ்ச்சிக்குக் காரணமாயிருப்பதறிந்து நான் பெருமை கொள்ளுகிறேன். இதற்காக நீ வருந்துவதும், மன்னிப்புக் கோறுவதும் எதற்கு? சுத்தப் பைத்தியம்!'' என்று மிகுந்த பரிவுடன் அவள் கண்களில் வழிந்த நீரைத் தன் முந்தாணையால் துடைத்து அவளைத் தேற்றினாள் கமலம்.

விசாலம் மெய்மறந்து போய் அசைவற்று நின்று விட்டாள். கமலத்தின் அன்பும், கருணையும், அவள் நெஞ்சையுருக்கி விட்டன. சட்டென்று அவள் கரங்களைப் பற்றிக் கொண்டு ''கமலம்! நீயே என் தெய்வம்! நீயே என் உலகம்!'' என்று மிகுந்த கனிவுடன் கூறினாள்.

தன்கைகளை யாரோ பற்றியிழுப்பதை உணர்ந்து திடுக்கிட்டு எழுந்தாள் விசாலம். அதே கடுப்பகல், கடும் வெய்யில். அவளுடைய குழந்தை மனோகரன் தன் கைகளைப்பிடித்துக் கொண்டு ''அம்மா! அப்பா வந்திருக்காம்மா! எழுந்திரம்மா'' என்று தொந்தரவு செய்வதையும், எதிரே சற்று தூரத்தில் தன் கணவன் நிற்பதையும் உணர்ந்தாள் விசாலம்.

பூ தோற்றம்.

ஆர். மெக்மிலன்.

[''பூ தோற்றம்'' என்ற தலைப்பின் கீழ் வரும் கட்டுரைகள் ஒரு வயயோதிகரால் தனது ஆஸ்திரேலியா நண்பரின் பதல்வ்க்கு எழுதினவையாகும். இக்கட்டுரைகள் தொடர்ச்சியாக நமது பத்திரிகையில் வெளிவரும்.] ப—ர்.

அத்தியாயம் 1.

நமது உலகம்.

அரிஸ்டாட்ல் என்ற கிரேக்கர் கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்வசித்து வந்தார். 'மனிதன் என்பவன் உண்மை நாடுவோன் உண்மை வேட்கையுடையவன், என்று அவர் கூறியிருக்கிறார். நீ உன் பாட்டனை பூ தோற்றத்தின் வரலாற்றைக்குறித்து கேட்டதை நோக்கினால் நீ அவர் கூறிய 'உண்மை வேட்கை' யுடையவன் என்பதைச் சேர்ந்தவன் என்றே நினைக்கின்றேன். உலகிலே இவ்வாறு இயற்கையின் தோற்றங்களை அறிய மிகச்சிலரே பாடுபடுகிறார்கள். உலகாயுதமான கரி

அவருக்கு எங்கிருந்துதான் அந்த கதரியமும் துணிச்சலும் வந்ததோ தெரியவில்லை. ''கண்டபுறம் போகணுமா? அந்த அபோழுக்கிபப்பயல் வேணுயின் உறவு இனி நமக்கு வேண்டாம் கொலை நடக்கும!'' என்று கண்களை உருட்டி விழித்த வண்ணம் இறைந்தார் சொக்கலிங்கம்.

அந்த சாய்வு நாற்காலியில் படுத்தவண்ணமே அவன் இறப்பதாயிருந்தால் அதைவிடமகிழ்ச்சி தருவதுவேசாலத்திற்கு வேறெதுவு மில்லை. சாவும் கனவுதான்! ஆமாம்! இரவுக கனவே பலிக்காத இக்காலத்திலே பகற்கனவு தானா பலிக்கப் போகிறது?

யங்களுக்குப் போராடி வருவதற்குக்கூட சகவாசம் கிடையாது. ஏறக்குறைய எல்லாரும் இன்பத்தை அடைய வழிவகைகளைக் கண்டு பிடிப்பதில் அல்லும் பகலும் பாடுபடுகிறார்கள்.

ஆனால் இன்பத்தையே தரக்கூடிய காரியமொன்று மில்லை. நீ நல்ல வேலை செய்வதில் தான் சந்தோஷத்தைக் காண்பாய். உனது இயற்கை உணர்ச்சிகளை நிறைவேற்றுவதில் தான் இன்பத்தைக்காண்பாய். ஆகவே, இன்பத்தையே தரக்கூடிய காரியமில்லை என்பதை நீ அறிவாய்.

நீ பூ தோற்றத்தைப் பற்றிகேட்பதற்கு முன் பூமி என்றால் என்ன என்பது உனக்குத் தெரியுமா என்று அறிய ஆசைப்படுகிறேன். அது எவ்வளவு பெரிது, அல்லது எவ்வளவு சிறிது என்று தெரியுமா? மிகச் சிலருக்குத்தான் தெரியும். மிகச் சிலர் தான் அதைப் பற்றி அறிய கவலைப்படுவார்கள். ஆனால் வருகிற தலைமுறையில் மக்கள் இவைகளைக் குறித்து ஆவலுடையவர்களாயிருப்பார்கள் என்று நினைக்கின்றேன்.

உலகம் என்றும் ஒரேமாதிரி இருப்பதில்லை. ஏன், இரண்டு நிமிஷத்துக்குக்கூட ஒரே மாதிரியிருப்பதில்லை. அது எப்பொழுதும் மாறிக் கொண்டேயிருக்கிறது. வாழ்வை மாற்றத்திற்கு அடிமை.

ஆகவே உலகமும் வாழ்க்கையும் ஒத்தே கடைபெறுகின்றன.

உயிர்கள் என்றும் தோன்றுவதும் மறைவதுமாகவே இருக்கின்றன. நமது வாழ்நாளைவிட உலகத்தின் வாழ்நாள் நீடித்தது காலத்தின் அளவு இறப்பு, பிறப்பு முதலியவைகளைப் பற்றிய எண்ணத்தை மாற்றினாலல்லாது உலகத்தைப்பற்றி அறிய முடியாது.

ஒரு சிறுகுழந்தைக்கு இவைகளை எல்லாம் கூறுவது மிகக்கஷ்டம் என்பதும் நான் அறிவேன். ஆனால் அவர்களுடையவர்களுக்கு எவ்வளவு கடினமான காரியமாயிருந்தாலும் சுருக்கமாகத்தான்றும் என்ற பொது விதியை நம்பியே உனக்கு இதைக் குறித்து சொல்ல முன்வந்தது.

நான் ஒரு சிறு குழந்தையிடம் பேசுவதாக நினைத்துக் கொள்ளவில்லை. நான் எனக்குத் தெரிந்தவைகளை எல்லாம் சொல்லப் போகிறேன். இன்று உன்னால் அறிந்து கொள்ள முடியாது போனாலும் நாளையாவது, அல்லது பின்னாளில் வது விளங்கிக் கொள்ளுவாய். சிறியவைகளைத் தான் விளங்கிக் கொள்ள முடியும என்ற எண்ணத்தை நீ மறந்து விடவேண்டும்.

இந்த உலகத் தோற்றம், உலக ஆரம்பம் என்பதைக் குறித்து என்னால் எவ்வளவு எளிய நடையில் சொல்லி விளக்க முடியுமோ அவ்வளவு எளிய நடையில் தெளிவாகச் சொல்லுகிறேன்.

நான் உனக்கு என்ன சொல்லப் போகிறேனோ அவைகள் எல்லாம் பெரிய புத்தகங்களில் எழுதப் பட்டிருக்கின்றன. அவைகள் இங்கிலாந்து, அமெரிக்க போன்ற நாகரீக நாட்டிலுள்ள அறிஞர்களால் கற்கப்படுகின்றன. ஆனால் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப் படுவதில்லை. இதற்குக் காரணம் ஒரு வேளை குழந்தைகள் இளமையானவைகள் என்றோ அல்லது அவர்களுக்கு அவைகளைப்பற்றி அறிய ஆசையிருக்காதென்றோ, அல்லது அவைகள் மக்குகள் என்றோ தெரியவில்லை. இந்தக் காரணங்களில் எதுவாயிருந்தாலும் என்னால் ஏற்க முடியாது. ஏனெனில் ஏழை களும் பணக்காரர்களைப் போலவே கற்க சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். குழந்தைகளுக்கு உண்மையை விளக்க வேண்டும். அதன் பலன் எதுவாயிலும்சரியே அதைப்பற்றி கவனிக்காமல் கற்பிக்க வேண்டியது நாகரீக உலகத்தின் கடமையாகும்.

மேகங்கள் இல்லாத ஓர் இரவில் ஒரு மாடியில் நின்று கொண்டு ஆகாயத்தை உற்று நோக்கு. ஆகாயத்தில்காணும் நக்ஷத்திரங்கள் மிகச் சிறியவை என்றும் வெகு தூரத்திற் கப்பால் இருக்கின்றன என்றும் நினைப்பாய். எல்லாவற் றிலும் இந்த உலகம் பெரியதென்றும், உறுதியான தென்றும், நீடித்ததென்றும், நக்ஷத்திரங்கள் ஆகாயத்திலுள்ள நெருப்புத் துணுக்குகள் என்றும் நீ எண்ணுவாய். ஏனெனில் நீ அவ்வாறுதான் இளமையில் கற்பிக்கப் பட்டிருக்கிறாய். அதற்கென ஒரு பாடமும் கற்பித்துக்கொடுத்து விடுகிறார் கள். நானும் எனது இளமையில் கற்பிக்கப்பட்டிருக்கிறேன்.

ஆனால் நக்ஷத்திரங்கள் நீ நினைப்பதுபோல் சிறியவை களல்ல! அவைகள் பெரியவை. நீ பார்க்கிற ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஒவ்வொரு சூரியன். நக்ஷத்திரங்கள் பெரிய வைகள். நாமோ சிறியவர்கள். நான் இவ்வாறு சொல்லு வதால் நீ ஆச்சரியப்படக் கூடும். அதனால் பொதுவாக உலகத்தைக் குறித்தும், நக்ஷத்திரங்கள் முதலியவைகளைக் குறித்தும் நீ கொண்டுள்ள எண்ணங்களை விட்டொழிக்க வேண்டும். ஒரு வேளை அவ்வாறு செய்வது உனக்குக்கஷ்ட மாக விருக்கும் என்று கருதுகிறேன். இந்த உலகம் அவ் வளவு பெரிதல்ல. உண்மையிலே நக்ஷத்திரங்கள் தான் பெரியவைகள். அவை மிகச் சிறியவைகளாய் காண் பதற்கு அவைகளுக்கும நமக்கும் உள்ள தூரமே காரணம். சூரியன் நமக்கு மிகப் பெரிதாகக்காணப்படுவதற்கு அதற்கும் நமக்கு முள்ள தூரம்தான். நமது பூமியும் சில நக்ஷத் திரங்களுக்குச்சமீபத்திலிருப்பது போல் சூரியனுக்குச் சமீபத் திலிருந்தால் நாமெல்லாம் சாம்பலாயிருப்போம்.

ஆஸ்திரேலியாவுக்கும் சூரியனுக்கு முள்ள தூரம் எவ்வளவு என்று நான் சொல் லட்டுமா? அதுதான் ஒன்பது கோடியே20 லக்ஷம் மயிலுக்குமேல்! இந்தத் தூரத்தை நமது மனதினால்கூட அளவிட முடியாது. ஒருவன் 10-லக்ஷம் பவுன் வைத்திருந்தால் அவனைப்பெரிய பணக்காரன் என கருதுகிறோம். ஆனால் ஒருவனாவது ஒன்பது கோடியே 30-லக்ஷம் பவுன் வைத்திருக்கவில்லை. ஏன்? உன்னால் 10 லக்ஷம் பவுன் எவ்வளவென்று ஊகிக்க முடியாது. அப்படி இருக்க இதைப்போல் சூரியன் 93 மடங்கு அதிக தூரத்தி லிருக்கிறதென்றால் எப்படி உன்னால்யூகிக்க முடியும்? சூரிய னிடமிருந்து உஷ்ணத்தையும், வெளிச்சத்தையும் நாம் அடை கிறோம். நமது உயிரும் சக்தியும் அதனால் தான் பெறு கிறோம். சூரியன் உதிக்கத் தவறினால் உலகத்தில் எந்த ஜீவராசிகளும் பிழைக்கா! இதனால் தான் "உயிர் என்பது சீசர் விலடைக்கப்பட்ட சூரிய ஒளி, மூடி திறக்கப்பட்டால் பிணந்தான்" என வின்வுட்டீயடி கூறியிருக்கிறார் போலும்.

நமது சூரியன் பூமியைவிட 15-லட்சமடங்கு பெரி தானது. சூரியனையும் நமது பூமியையும் ஒப்பிட்டால் நமது பூமி ஒரு சிறு அணுவை ஒத்ததாய்த்தானிருக்கும். இந்த உலகத்தை நீ சுற்றிப் பார்த்திருக்க மாட்டாய்.

ஆஸ்திரேலியாவுக்கும் லண்டனுக்கும் சுமார் 13-ஆயிரம் மைல். ஆனால் சூரியனுக்கும் நமக்குமுள்ள தூரம் 93000000 மைல். ஒரு சிறு பந்தையும் நமது பூமியையும் ஒப்பிட்டால் நமது பூமி பெரிய உருவமுடையதுதான். ஆனால் சூரியனோடு ஒப்பிட்டால் நமது பூமி மிகச்சிறியது. அதே சமயத்தில் மற்ற சூரியன்களோடு நமது சூரியனை ஒப்பிட்டால் நமது சூரியன் மிகச்சிறியதுதான். தென் கடைக்கோடியில் மிகப் பிரகாசமாக விளங்குகிற கேனோபஸ் (Canopus) என்ற நக்ஷத்திரம் நமது சூரியனைவிட $10\frac{1}{2}$ லக்ஷம் மடங்கு பெரியது! அதாவது நமது பூமியைவிட சூரியன் எவ்வள மடங்கு பெரிதோ அதேபோல் சூரியனைவிட அந்த நக்ஷத்திரம் பெரிது. நமது சூரியன், ஆகாயத்தில் நாம் பார்க்கிற நக்ஷத்திரக் கூட்டங்களின் சிறு குழந்தை என்றே சொல்ல வேண்டும்.

பூமி தோற்றத்தைப் பற்றி நீ அறிய முற்படுவதற்கு முன் அதைப்பற்றி நீ கொண்டிருக்கிற மனப்பான்மையை மாற்ற வேண்டுமென்று சொன்னது உனக்கு விளங்குகிறதா? உலகம் எப்படி தோன்றியது என்பதைப்பற்றி உனக்கு சொல்ல நினைத்தபோது உலகம் என்றால் என்ன? எவ்வளவு சிறியது அது? இப்பிரபஞ்சத்தில் இது எவ்வளவு அற்பமானது என் பவைகளை உனக்கு முதலாவது எடுத்துக்கூற வேண்டும் என்று எண்ணினேன்.

ஆகவே இவ்விஷயங்களைக் குறித்து முடிப்பதற்கு முன் ஒன்றை நான் கூறிவிடுகிறேன். அதாவது, ஒருவேளை இந்த உலகத்தையே இந்த சூரியன் மீது எடுத்துப் போடச் சொன் னால் சிறிது சுவாலை தான் எற்படும். ஆனால், உனக்கு அந்த சூரியனை இந்த உலகப் பொருள்களால் நிறப்பவேண்டு மானால் 10 லக்ஷம் பூமிகள் வேண்டும்! உண்மை இப்படி இருக்க, இந்த மண் பந்துவில் இருக்கிற மனிதவர்க்கம் தான் பிரதானமானதெனக் கருதுகிறோம். இன்னும் நினைத்துக் கொண்டே வருகிறோம்.

பிரபஞ்சத்திலே மனிதனைப் பற்றிக் கவலைக்கொண்டு மிக விசேஷமாக பாடுபடுவது வீண்காலக் கேடு என உலக போராசிரியரான கார்ல் ஸ்னைடர் என்பவர்கூறுகிறார். "அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் மீது மூடிக்கொண்டு இருக்கின்ற மூடுபனியின் ஒரு சிறுதுளியிலுள்ள அணுக் களைப்பற்றியும், தானிருக்கு மிடத்தைப்பற்றியும் எண்ணு

கடவுள்

(மாயவரம் K. P. B. S.)

நம் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும், ஐம்புலனுக்கும் பகுத்தறிவிற்கும், தூரதிருஷ்டிக் கருவிக்கும், பிர பல விஞ்ஞானிக்கும், யோகிக்கும், விவேகிக்கும் இது பரியந்தம் தென்படாத வஸ்துவை இன்னும் நம்மில்பலர் கடவுள்என்றும், பிர்மா,விஷ்னு, சிவன் என்ற மூக்கடவுள் என்றும், பற்பலனென் றும் பரபிரம்மனென்றும், பாபாரூபி என்றும் பலவித ரூபங்க ளாய் அவைகளை அமைத்தோ ஆழ்ந்தனண்ணத்தில் லயித்தோ ஆடிப்பாடியோ-ஆனந்தக் கூத்தாடியோ ஆக அடிமையாகி வரு-வதை நாம் கண்கூடாய்க் கண்டுவருகிறோம். தவிர சுயமரியாதை என்னும் அறிவு பெருக்கும் இபக்க மாகிய சுடர் ஒளி ஓங்கி வரு வதைக் கண்டு இன்று பலர் கடவுள் ஒன்று உண்டு, இரண்டு உண்டு, மூன்று உண்டு, என்னது பெரிது, உன்னது சிறிது, நான் கண்டேன், நான் காணேன், நான் காணப்போகிறேன், நான் இதோஇப்போது!!! என்று தாண்டித்தாண்டிக் குதிக்கவும், தந்தனத்தான் பாட்டுப்பாடவும், தவளைகள்போல் தன்னை உணராது கத்துவதும், பகவதி வேஷம் போடுவதும்ஆகியஇவை நமக்கு பட்டப்பகலை இரவு என்று பகலுவதுபோல் தோற்று கிறது. இருப்பினும் இவ்விஞ்ஞான உலகுக்கு ஓர் பழிப்பினை யும் அருவருப்பையும், மோசக் கருத்தையும், தகிடுதத்தத்தையும் தரத்தக்கதுவே! அல்லாற் வேறெது?

ஒன்று சொல்லுகிறேன் - கடவுள் உண்டு என, காக்கை போல் கரையும் கபாள பொய்பருக்கு "கடவுள் இல்லை காண்

வதை ஒத்ததான் மனிதன் தன்னைப்பற்றியும் எண்ணுவது" என அவர் கூறியிருக்கிறார்.

இத்தகைய விஷயங்களை உன்னைப் போன்ற சிறுவர் களுக்கு எடுத்துரைப்பதுதவறு என்றும் அது சரியல்ல வென் றும் சிலர் சொல்லக்கூடும். ஆனால் உண்மையை யாருக் கும் எடுத்துரைக்க நான் ஒரு போதும் அஞ்சுவதே யில்லை. நான் அஞ்சுவதெல்லாம் அறியாமையைக் கண்டு தான்.

பது உண்மை" என அக்கினிமிதிக்கு அஞ்சாது உள்ளோம் உள்ளோம் என்று மூன்று முற்றுப்புள் ளையுடன் கூறினோம். மறுப்பவர் இருந்தால் எதிர்க்கலாம்!!!

சகல சாஸ்திர விற்பன்னராகிய கடவுளின் பக்தர்களாகிய கடவுளைக்காணாது கனதிடம் கொண்டவர்களாகிய புகழ்மனம் பெற்றவர்களாகிய பட்டினத்தார், அருணகிரி, அப்பர், காயுமானவர், சிவ வாக்கியர், புத்தர், கச்சியப்பர், விவேகானந்தர், கேசவசந்திர தத்தர், ராமலிங்கர் ராஜ்ராம் மோஹனராய், தயானந்த சாஸ்வதி, குணம் புகழ்பெற்ற குணங்குடி மஸ்தான் முதலிய நிபுணத்துவம் பெற்ற பெரியோர்கள் கல்கடவுளினைப்பற்றியும், காணாக் கடவுளனைப்பற்றியும், சதுர்மறைச் சாஸ்திரசூத்திரங்களைப்பற்றியும், சுவர்க்க நரகங்களைப் பற்றியும், பார்பன பார்சு பாடுகளைப் பற்றியும் கற்பனாக் கற்பிதங்களைப் பற்றியும், என்ன மூடி வெய்தினர் என்பதை நாம் பகுத்தறிவு கொண்டுபோர்க்கும் கால்:- அன்னவர்களுக்கு கடவுள் இல்லை என்ற முழு நம்பிக்கைதான். அவைக்கு "அத்தாட்டி" யானப் பாடல்களையும், பாடி மடிந்தனர். அவைப்பின் குறிப்பிடுவோம்

சுயநல சூழ்ச்சிக்காரர் இயற்றிய கற்பனா கற்பிதங்களான வேதம், சாஸ்திரம், புராணம், ஆகமம், சுத்துவம், கலைஞானம் இன்னும் இவைகளைப், போன்ற பாகவதம், பாரதம் ராமாயணம் முதலியவைகளை மேற்படியார்களில் சிலர், முழுதும் உண்மையெனக் கருதி கடவுளைக்காண நாடு நகரங்களையும் பெண்டு பிள்ளைகளையும் சிறப்புமிக்க செல்வங்களையும் சிறிதும் பாராதுவிடுத்து, கானகம் சென்றனரே! தறுதிக்கோலம் பூண்டனரே.

மழையினில் நனைந்தனரே. கானலை நிழல் என மதித்தனரே. காற்றை ஆகாயமெனப் புசித்தனரே. வேர்வைக்கசடை குளிநீர் என்று குளித்தனரே. கடுந்தவம் மியற்றினரே. கண் கலங்கி வாடினரே. கதிபெற வழி அற்றனரே. அன்னவர்க்கு எக்கடவுளன் மனமிசைந்துத் தோன்றினன்?..... தோன்றினன் தோன்றின் என்பது அன்னவர்ப் பாடல்களில் நம்மில் சிலர் படித்துள்ளோம் - படிக்காதுள்ளோம். இருப்பினும் இங்கு குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

பட்டினத்தாரின் பாடல்கள்

"கேடங்க நிட்டைடகள் வேதங்களாம் நீதிநெறி, ஓமங்கடர்ப் பணஞ் சந்தி செப மந்தர யோசநினல. நாமாங்கள் சந்தனம்

வெண்ணீறு பூசி நலமுடனே, சாமங்க டோறும் மிவர் செய்யும் பூசைகள் கர்ப்பனையே''

''உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தை மூற்றையாப் புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன் பொன் எனவே, ஒளியிட்டதாளிரண்டுஉள்ளே யிருக்க உண்மை கண்டேன், வெளியிட்டடைத்து வைத்தே னினிமேலொன்றும் வேண்டிலனே'

''நீற்றைப் புனைந்தென்ன நீராடப்போயென்ன நீ மனமே மாற்றிப் பிறக்க வகையறிந்தாயில்லை, மாமறை நூல் எற்றிக் கிடக்கும் மேழுகோடி மந்திரம் மென்ன கண்டாய், ஆற்றிற் கிடந்தும் துறையறியாமற் கலிக்கின்றனே''.

''சொல்லினும் சொல்லின் முடிவினும் வேதச் சுருதியிலும் அல்லினும் மாசற்ற வாகயந் தன்னிலும் ஆய்ந்து விட்டோர் இல்லினும் மண்பரிடத்திலும் ஈசன் இருக்குமிடம் கல்லிலும் செம்பிலுமோ?''

''அப்பர் பாடியது'':—

''என்னின் அல்லான் ஒப்படையனல்லதே ஒருவனல்லன் ஓர் ஊனல்லன் ஒருவமன் இல்லி அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும் அவன் அருகே கண்ணாகக்காணின், அல்லாற் இப்படியன் இன்னிறத்தான் இவ்வண்ணத்தான் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே''

''சிவ வாக்கியர் பாடியது'':—

''ஊரிலுள்ள மனிதர்கள் ஒருமனதாப்க் கூடியே தேரிலே வடத்தையிட்டு செம்பைவைத்து இழுக்குறீர். ஆரினாலும் அறியொனாத வாதசித்த நாதனைப் பேதையான மனிதர் பண்ணும் பூளி பாரும் பாருமே.''

''தாயுமானவர்'':—

''அங்கு இங்கு என்னாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தப் பூர்த்தியாகி, அருளோடு நிரைந்தது எது? தன் அருள் வெளிக்குள்ளே தங்கும்படிக்கு இச்சைவைத்து உயிர்க்குயிராய்த் தழைத்தெது? மனவாக்கினால் தட்டாமல் நின்றதெது?'' (இதன் சோர்மையான அருத்தம்காற்று.)

"குணங்குடி மஸ்தான்." :—

"காடுங் கரையுஞ்சுழன்று, ஓர் காட்சியுங் காணாமெனவே யுழன்று, தேடும் பருவத்திற் சென்று திக்கு திசையென்றுந் தெரியாமற் தெளிதற்கு நின்று இறக்கத்துணிந்து கொண்டேனே எனக்கிருக்குங் குறை மூழுதும் நிகழ்த்திக்கொண்டேனே"

"பார்க்கப் பலவிதமாயும் பல்லாயுரங்கோடி அண்டமதாயும் காக்கு நிலைக்குயிராயும் நின்ற காரண பூரண காற்றினைப் போற்றி (இரக்கத்)

"அய்யோ உலகிலழியா வரம்பெற்றியாரிருந்தார் அய்யோ வுனக்கந்த வாதாவென்ன கிலாசை—யென்னோ—பொய் யான வாழ்வும் புலையாட்டு கும்பும் பூதாலக்க—ஓய்யாமூள்ள குணங்குடியாற்கு முறவில்லைபே"

"நஞ்சுண்ணு மாப்போலு நாதனருள் பெறவென் நெஞ்சே! நீ புண்ணாய் நினைப்பதேன். அஞ்சாதே என்று முத்தணம் முள்ளே எகாதிருப்பதால் ஒன்றுங் குணங்குடியினுள"

"வஞ்ச வேல்கொடு மார்பி லெறியினும், விஞ்ச வேதழல் மீட்டி எரிக்கினும் நஞ்ச நாழு கவியினும் அஞ்சிடாதவ ரானந்த மாவரே"

"அருணகிரி":-

கட்டகல்லு தெய்வம் மென்று காலுபுறம் சுற்றிவரீர்—கட்ட கல்லுப் பேசுமோ நாதன்உள்ளிருக்ங்கயில்—சுட்டசட்டுவம் தன் கரிச்சுவை யறியுமோ?

கச்சியப்பர்:—

"ஈசன் தந்திடு விஞ்சையொன்று எமக்குளது; எவர்க்கும் பேசும் தன்மையது அன்று அது; குறவர் பால் பெரிதும் நேசம் பூண்டவர்க்குறைப்பது நெஞ்சினில் சிறிது மாசு இன்றாய் நிற்கு உணர்த்துவம் அஃது"

எனவே, கடவுளைக்காணாது நம்பி கன்னா பின்னா என்று காணாக் கடவுளை துவேஷித்துள்ளார்கள். இன்னும் ராம லிங்கர் போன்ற பெரியோர்களும் மனத்தூய்மை, செயல் தூய்மை, சொல் தூய்மையைக்காப்பாற்றவும், கருதவும் இருந்தால் போதுமே என்றுதான் சொல்லி உள்ளனர்.

விஞ்ஞான விவேகம்

இயற்கையை மாற்றும் செயற்கை வழி.

வெடிகுண்டுக்கு உதவி.

உலக முன்னேற்றத்திற்கு டெலிவிஷன் உதவுவதற்குப் பதிலாக யுத்தமனுக்கு மீண்டும் விஞ்ஞானம் உபயோகிக்கப்படப் போகிறது. டெலிவிஷனைக் கண்டு பிடித்த ஜான் எல். பார்ட், தற்பொழுது கடும்பனி மூட்டத்திலும் 30 மைல்களுக்கு பேல் பார்க்கக்கூடிய ஒரு இயந்திரக் கண்ணையும், வெடி குண்டு வீசும் விமானங்களின் உபயோகத்திற்காக ஒரு சிறு டெலிவிஷன் கருவியையும் கண்டு பிடித்திருக்கிறார் இந்த இரகசியம்இன்னும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு விற்கப்பட வில்லை.

முகமூடிகள் வீண்.

யுத்தகாலங்களில் விஷப்புகை வெடிகுண்டுகளுக்காக முக மூடிகள் அணியத் தேவையில்லை. அதைச்சுலபமான வழியில் நிராகரித்து விடலாமென லண்டனில் உள்ள புரொபசர் அந்தோணி கூறுகிறார். ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு குறிப்பிட்ட ஒரு வேகம் பாவும் சக்திதான் உண்டென்றும், விஷப்புகைக்கு

ஆகையால், அன்பர்களே! "கடவுள் இல்லைக் காண்பது உண்மை" என்ற நம்பிக்கையில் லயித்து நாம் காணாத வஸ்துவுக்குக் கவையவும் வேண்டாம் அடிமையாகவும் நினைக்க வேண்டாம். ஒன்றுமட்டும் பொது விதிக்கு ஒக்கும் நியாயத்திற்கிசைந்தும், நாம் நடந்தால் நாமே கடவுள்தான். எனவே என் வியாசத்தை முடித்துக்கொள்கிறேன்.

"அறிவே பெரிது-அஃதன்றி வேறிது? இருப்பினும் கடவுள் இல்லைக் காண்பது உண்மை".

மாற்று மருந்து தாம்கண்டு பிடித்திருப்பதை ரேடியோமூலம் பாப்பி விட்டாலே போதுமென்றும் அறிவிக்கிறார்.

மாற்று மருந்து பாவிவிட்டால் விஷப்புகை மனிதனின் ரத்தில் போய்த் தாக்கமுடியாதென்றும், எனவே உயிர்கள் காப்பாற்றப் பட்டுவிடுமெனவும் கூறுகிறார்.

விமானங்களை வீழ்த்த ஜர்மன் ஒளி.

மாணஒளி, கண்காணா கிரணம் என்பவைகளைப்பற்றி ஏராளமான விவரங்கள் வெளிவருகின்றன. ஜர்மனியில் தற்பொழுது பரீசீலனை செய்துவரும் மாண ஒளியில், ஜர்மன் சர்க்கார் தீவிர ஆர்வம் காட்டி- ஊருகின்றனராம். லாச்ஸனி, பவேரியா ஆகிய இரு ஜர்மனிய எல்லைப்புறமாகாணங்களில் ஒருமைல் நீளத்திற்கு, இந்த மாண ஒளியைப் பாய்ப்பும் சக்திமிருந்த உற்பத்திஸ்தாபனங்கள் பல கட்டப்பட்டிருக்கின்றன. இவ்விடத்திலிருந்து வீசப்படும் ஒளியினால் எதிரி விமானங்கள் ஜர்மனிக்குள் நுழையாதபடி செய்துவிட முடியுமாம் இந்த ஒளிபாட்டியுள்ள பிரதேசத்தில் எதாவது விமானம் வந்தால் அவை பறக்கும் சக்தியிழந்து குடைசாய்ந்து கீழே விழுந்து விடுமாம்.

பிரிட்டன் இரகஸ்யம்.

மாண ஒளியினால் எல்லா விமானங்களுமே பாதிக்கப் படுவதில்லை. 'டைஸல்' என்ற வகையைச்சேர்ந்த எஞ்சின்கள் உள்ள விமானங்களை இவ்வொளி ஒன்றும் செய்யாது.

கயிறுகட்டி ஆகாயத்தில் பறக்கவிடப் பட்டிருக்கும் பலூன்களில் இந்த ஒளியை உண்டாக்கும் இயந்திரங்களைப் பறக்கவிட்டு எதிரிகள் வருகையைத் தடுக்கமுடியுமான சோதனைகள் நடைபெற்று வருகின்றன. பிரிட்டிஷாருக்கு விமானங்களை வீழ்த்தக்கூடிய ஒரு புதிய இயந்திரத்தின் ரகஸ்யம் தெரியும். ஆனால் அதை வெளியிட முடியாதென்றும் பிரிட்டிஷ் ஆகாயப் படை மந்திரி கூறுகிறார்.

வயற்றிற்குள் விநோதம்.

நூதனமாகவும், வேடிக்கையுமான காரியங்களைச் செய்வதில் ஜப்பானியர்கள் தீரர்கள். உலகத்தில் தற்கால சினிமா காட்சி முன்னணியிலிருந்து வருகிறது. மக்களுக்கு பல துறை

யிலும் அறிவு புகட்டக் கூடிய அநேக ஆயிரமடங்கள் தயாராகி விட்டன. ஆனால் ஜப்பானியரோ மனிதன் உணவு உட்கொண்டவுடன், குடலில் உணவை ஜீரணம் செய்வதற்காக நடக்கும் போராட்டத்தைப்படம் பிடித்திருக்கிறார்கள். இப்படம் பெல்ஜிய விஞ்ஞானிகளிடம் காட்டப்படும். இதற்கென தனியாகச் செய்யப்பட்ட காமிராவில் அநேக சிறு கண்ணாடிகளும் மின்சார பல்புகளும் பிணைக்கப்பட்டிருக்கின்றன. இதன் உதவியால் ஒரு பெண்சிலின் குறுக்களவு விஸ்தீரணமுள்ள படம்பிடித்து, அனுபெரிது படுத்தி பிலிம் அளவுக்கு எடுக்கப்படுகிறதாம்.

விளக்கெண்ணை விஷம்

அமெரிக்காவிலும், எகிப்திலும் வருஷாவருஷம் கோட்டுக் கிளிபடை எடுப்பால் பயிர் பச்சைகள் இருந்த இடம் தெரியாமல் நாசமாகி விடுகின்றன. டாக்டர் எல். எம். கிறிஸ்டென்ஸன் என்ற அமெரிக்கர் இதைச்சுலபத்தில் தடுக்கும் வழியொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்.

முன் ஆண்டுகளில் இந்த நஷ்டத்தைத்தடுக்க அமெரிக்கா வராளமானபொருள் செலவிட்டிருக்கிறது. 1936-ல் மட்டும் 29,73,90000 ரூபாய் மதிப்புள்ள பயிர்கள் நாசமானதாகச் சர்க்கார் கணக்கிட்டிருக்கின்றனர்.

ஆமணக்குச் செடியின் தழைகள் வெட்டுக்கிளிக்கு விஷமாயிருந்த போதிலும் இதைக்கண்டுபிட்டால் வெட்டுக்கிளிகள் வேறு இடத்திற்குச் செல்லாவாம்.

டாக்டர் கிறிஸ்டென்ஸன் ஒரு வலைக்கூடாரம் அடித்து அதற்குள் ஆமணக்குச் செடிகளையும் 19 வெட்டுக் கிளிகளையும் வசிக்கவிட்டார். இரண்டு தினத்தில் 16 வெட்டுக்கிளிகள் மாண்டன. இவை இத்தழைகளை தின்றே இறந்தன. இதர மூன்றும் ஆமணக்கு விதைகளைத் தின்றதால் தப்பின.

இதனால் இப்படை எடுப்பைத் தடுப்பதற்கு வயலைச் சுற்றி ஆமணக்குச் செடிகளை உற்பத்தி செய்தால் போதுமென கூறுகிறார். இம்முறை அமெரிக்க சர்க்கார் இவ்வருஷம் கையாண்டு பார்க்க உத்தேசித்திருக்கிறார்கள்.

உப்புநீரை ஒழிக்க வழி.

பார்த்த பக்கமெல்லாம் ஜலம்; குடிக்க மாத்திரம் துளி ஜலம் கிடையா என சமுத்திரத்தின் நடுவிலிருந்து ஒருவன் அவஸ்

தைப்பட்டுக் கூறியதாக ஆங்கில பழமொழி யொன்றுண்டு. ஆந்த சமூத்திர ஜலத்தையும் குடி தண்ணீராக அதிக சிலவும் பிரயாசை யுமின்றி மாற்ற முடியுமானால் மக்களுக்கு மகத்தான உபகார மல்லவா?

அவ்வாறே மாற்றுவதற்கு ஜர்மன் விஞ்ஞானிகள் ஒருவழி கண்டு பிடித்துள்ளனர்.

'டிஸின்' என்பது குங்கிலியம் போன்ற ஒரு வகையான குங்கிலியத்தைக் கொண்டு சமூத்திரஜலத்தை இருமுறை வடிகட்டி உலகத்தில் எப்பகுதியிலும் அடிப்படாத முதல்தர குடி தண்ணீராக மாற்றிக்காண்பிக்கும் முறையைக்கண்டுபிடித்து நிரூபிக்கின்றனர்.

செயற்கைப் பழம்.

சாதாரணமாய், பூக்களில் மகரந்தப்பொடி கலப்பதால் செடிகள் காய்க்கின்றன. ஆனால் தற்பொழுது மகரந்தப்பொடி இல்லாமலே பூக்கள் காய்த்துப்பழுக்கும் முறை யொன்றைக்கண்டு பிடித்திருக்கிறார்கள். ரசாயனப் பொருள் ஒன்று மகரந்தத்தூள்களுக்குப் பதிலாக உபயோகமாகிறது. இம்மாதிரி உற்பத்தியான பழங்களும் இயற்கையாக உண்டான பழங்கள்மாதிரியேதானிருக்கின்றன. ஆனால் செயற்கை பழங்களின் விதைகளுக்கு முளை மாத்திரம்இருப்பதில்லை.

ஆரோக்கியம் அறிய வழி.

ஒருவனது உடல் பூரணவளர்ச்சி பெற்றிருக்கிறதா என்று சோதிக்க, அவன் கைநகத்தை ஒரு குறியாகக் கொள்ளலாம் என லண்டன் வைத்தியர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். ஒருவனது உயரம் கனம் இரண்டையும் கொண்டு அவன் பலசாலியா என்றுகண்டு பிடிப்பது என்ற தற்கால நடைமுறைக் கொள்கை உளுத்துப் போய் விட்டது என ஆக்ஸ்போர்டு பூபசாரன கிராஸ்கிளார்க் கூறுகிறார்.

ஆகவே மனிதவளர்ச்சி பூரண மாயிருக்கிறதா இல்லையா என்று பார்க்க நக வளர்ச்சியை ஆதாரமாகக் கொண்டு சோதனை செய்து வருகிறார்கள்.

வைட்டமின்.

வைட்டமின் என்ஜின்களுக்கு உபயோகப்படும் வழவழப்பான எண்ணையினால் என்ஜின்கள் ஓடுவதில்லை. ஆனால் என்

மகோன்னத நிலை.

(மதுரை பி. ஜைதீன்)

கவி ரவீந்திரநாத் தாகூர் கதையை
தழுவி எழுதியது

அவள் ஒரு அழகிய சிறுமி. நான் ஒரு விளையாட்டுச்சிறுவன். அவ்விளங்குமரியின் வனப்பில் அச்சிறு கிராமமே பெரிதும் பெருமைகொண்டிருந்தது. ஆனால் என்போன்ற காட்டுமிராண்டியின் கண்களுக்கு அவள் அழகு அவ்வளவு மகத்துவம் பெறவில்லை.

நானும் ஸோரபாலாவும் ஒரே பள்ளியில் ஒன்றாக படிப்பது வழக்கம். இருவரும் ஒன்றாகவே விளையாடுவோம். நான் அவள்வீட்டிற்குச்சென்றபோதெல்லாம் அவள் அன்னை எங்கள் இருவரையும் அருகில் நிறுத்தி, கண்குளிரப்பார்த்து எவ்வளவு அன்பான ஜோடி என்று வாயாரவாழ்த்தாத நாட்கள் கிடையாது. நான் அப்பொழுது சிறுபையனாக இருந்தபோதிலும் அவள் அப்படி சொல்வதின் அர்த்தம் எனக்கு விளங்காமலில்லை.

எல்லோருக்கும் இருப்பதைவிட அவள் விஷயத்தில் எனக்கு ஒரு தனி உரிமை உண்டு என்னும் எண்ணம் நாளாவட்டத்தில் என் மனதில் பதிந்தது. அவள் என் சொந்தப் பொருள் என்னும் கர்வத்தால் அவளை கொடுமைப்படுத்துவதும், தண்டிப்பதும் உண்டு. அவள் என் பணிகளை செய்யவும் இடும் கொடுமைகளை தாங்கவுமே இவ்வுலகில் பிறந்

ஜனுக்குள் ஒரு பாகம் மற்றொன்றோடு உறையாமல் காத்துக் கொள்ளுகிறது. அதே போல் வைட்டமினுக்கு தாமாக உணவு சத்து கிடையாது. ஆனால், அவை இல்லாவிட்டால் நாம் உட்கொள்ளும் உணவு சதையாகவும், சக்தியாகவும் மாற்றமுடியாதென டாக்டர் பெட்டர் ஹெல்த் கூறுகிறார்.

திருக்கிறாள் என்று நினைத்து மற்ற எல்லா வஸ்துக்களைக் காட்டிலும் அவள் என்னால் மிகவும் புறக்கணிக்கப்பட்டு வந்தாள்.

* * *

சாதுரீஸ் என்னும் வம்சத்தினர் பரம்பரை ஜமீன்தார்கள். அவர்களுடைய நிலபுலங்களைக்கவனிக்கும் வேலையில் என்னுடைய தகப்பனார் இருந்தார். நான் நன்றாய் எழுதப் படிக்க தெரிந்தவுடன் 'எஸ்டேட்' வேலைகளில் என்னை பழக்கி ஜமீன்தாரி நிலங்களுக்கு வரிவசூல் செய்யும் உத்தியோகத்தில் அமர்த்த வேண்டுமென்பது என் தந்தையின் சிந்தை.

எங்கள் கிராமத்து நீல்ராட்டன் கல்கத்தாவிற்கு ஓடிப் போய் சிறிது ஆங்கிலம் பயின்று இப்பொழுது ஜில்லாமாஜிஸ்டிரேட் ஆபீசில் காஜிர் வேலையில் இருக்கின்றான். அது தான் என்னுடை வாழ்க்கையின் லக்ஷியமும். நான் ஒரு மாஜிஸ்ட்ரேட்டின் காஜிர் ஆகாவிட்டாலும், கச்சேரி தலைமை குமாஸ்தாவாகவாவது இருக்கவேண்டுமென்று இரகசியமாகத் தீர்மானித்திருந்தேன்.

என்னுடைய தகப்பனார் கச்சேரி உத்தியோகஸ்தர்களை மிகவும் மரியாதையாக நடத்துவதைக்கவனித்திருக்கிறேன். அவர்களுக்கு ஜனங்கள் இனாமாக நெய்; பால், பழம், காய்கறி, சில சமயம் பணம் முதலியவைகள் கூட கொடுப்பதை நான் சிறுவயது முதல் அறிந்திருக்கிறேன். இந்த காரணங்களினாலேயே நான் கச்சேரி உத்தியோகஸ்தர்களிடம் விசேஷ மரியாதை வைத்திருந்தேன், இந்த தெய்வங்கள் தான் (கச்சேரி உத்தியோகஸ்தர்கள்) நம்மிந்திய நாட்டில் பெரிதும் வணங்கப்பட்டு வருகின்றனர். தெய்வங்கள்—இந்துமத பௌராணீக முப்பத்து முக்கோடி தேவர்களின் மறு அவதாரங்கள். நினைத்த காரியங்களில் வெற்றி பெறுவதற்கு பழய தொந்திப் பிள்ளையாரைக் காட்டிலும் இந்த தெய்வங்களிடம் ஜனங்கள் மிகவும் நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆகையால் ஜனங்கள் முன்பு கணேசருக்குச் செலுத்த வேண்டிய காணிக்கைகளை 'இவ்வுயிருள்ள தெய்வங்களுக்குச்செலுத்தலாயினர்.

நீல்ராட்டன் வழியைக் கடைப்பிடித்து நானும் ஒரு கல்ல சந்தர்ப்பம் பார்த்து கல்கத்தாவிற்கு ஓடிவந்து விட்டேன்.

அங்குள்ள எனக்கு தெரிந்த சிலரின் உதவியாலும், பின்னால் என் தகப்பனாராலும் படிப்பதற்காக பொருள் உபகாரம் பெற்று வந்தேன். ஆக இந்தப்படி என் பாடங்களைக்கலாசாலையில் ஒழுங்காகக் கவனித்து வந்தேன்.

* * *

கல்கத்தாவிற்கு வரவும், நம் அடிமை நாட்டின் நிலைமை ஒருவாறு அறியவும், நான் ராஜீய விஷயங்களிலும், பொதுஜன சேவையிலும், பங்கெடுத்துக்கலந்துகொண்டு வந்தேன். என்னுடைய தாய் நாட்டிற்காக உயிரையும் திணமாக மதித்து தியாகம் செய்ய எந்த நேரத்திலும் தயாராக இருந்தேன். ஆனால் நான் அதற்காக எந்தவழியைப்பின்பற்றுவது என்பதுதான் தெரியவில்லை. மற்ற எவரும் எனக்கு வழிகாட்டுவதற்கு முன்வரவில்லை.

வரவர தேசத்தின் மீதுள்ள பற்று ஒரே குருட்டு நம்பிக்கையால் அதிகமாகிக்கொண்டே வந்தது. எங்கள் சங்கத்தின் தலைவர்கள் அடிக்கடி பிரசங்கம் செய்வார்கள். நாங்கள் ஆகாரத்தையும் அருந்தாமல், கதிரவனின் கடும் வெய்யிலையும் சகுதாது உண்டியல் பிச்சைகேட்டுக் கொண்டிருப்போம். அல்லது தெருவின் மூலை முடுக்குகளில் நின்று கொண்டு வெளியீடுகள் விநியோகம் செய்து கொண்டிருப்போம். சில சமயங்களில் மேலை நாற்காலிகளை, பிரசங்க மேடைகளில் அடுக்கிக்கொண்டிருப்போம். எங்கள் தலைவர்களைப் பற்றி யாராகிலும் ஏதாவது ஒரு வார்த்தைசொல்லிவிட்டால், நாங்கள் அவர்களோடு சண்டைபோடுவதற்கும் தயாராக இருப்போம். இந்த காரணங்களினால் பட்டணத்திலுள்ள பையன்கள் எங்களைப் பார்த்து 'பட்டிக்காட்டான்கள்' என்று சொல்லி சிரிப்பது வழக்கம்.

நான் நாஜிராகவாவது, அல்லது கச்சேரி தலைமைக் குமாஸ்தாவாகவாவது ஆகவேண்டுமென்று கல்கத்தாவிற்கு வந்தேன். ஆனால் நான் இப்போழுது இத்தாலி சுதந்திர வீரர்களான மாஜினி, கரிபால்டி போன்று தயாராகிக்கொண்டு வருகிறேன்.

இந்த சமயத்தில் ஸுபாலாவின் தந்தையும் என்னுடைய தந்தையும், எங்கள் இருவரையும் விவாகத்தால் ஒன்று சேர்க்க முயற்சித்தினர். நான் கல்கத்தாவிற்கு வரும்பொழுது வயது பதினெட்டு. என் தந்தையின் அபிப்பிராயத்தில்

நான் அநேகமாக என் விவாக வயதை கடந்துவிட்டேன் என்று எண்ணிக்கொண்டார். நான் என் வாழ்நாள் பூராவும் பிரம்மச்சாரியாகவே இருந்து, தாய்நாட்டிற்காக என் உயிரையும் அர்ப்பணம் செய்வதென்று இரகசியத்தில் தீர்மானித்திருந்தபடியால் நான் படித்து முடிந்தவுடன் தான் கலியாணப்பேச்சே ஆரம்பிக்க வேண்டுமென்று கண்டிப்பாக சொல்லிவிட்டேன்.

வீழ்ந்த இந்தியாவை தட்டி எழுப்புவதற்காக வேகமாக நன்கொடைகள் வசூலித்துக்கொண்டிருந்த காலம். ஸுராபாலாவை, யாரோ ராம்லோச்சன் என்ற வக்கீலுக்கு 'கட்டிக் கொடுத்து' விட்டதாகக் கேள்விப்பட்டேன். என்னுடைய சிந்தையில் இவ்விஷயம் அப்பொழுது அவ்வளவாக ஒன்றும் படவில்லை.

நான் 'இண்டர் மீடியட்' பரிக்ஷைக்கு தயாராகிக்கொண்டிருக்கும் சமயம் என் தகப்பனார் இயற்கை எய்தினார். என்னும் செய்தி கிடைத்தது. இவ்வுலகில் நான் மட்டும் தனியாகயில்லை. கணவனை இழந்த என் அன்னையையும் என் இரு சகோதரிகளையும் பரிபாலிக்க வேண்டிய கடமை என்னைச் சேர்ந்ததாயிருந்தது.

* * *

ஆகையால் என் மாணவ காட்சனை விடுத்து, உத்தியோகத்திற்காக அலைந்துகொண்டு திரியலானேன். கடைசியாக நோக்கஹாலி ஜில்லாவின் சிறு கிராமமொன்றில் ஒரு உதவி உபாத்தியாயரின் வேலை கிடைத்தது. எனக்கேற்ற வேலை கிடைத்ததென்று திருப்திப்பட்டுக் கொண்டேன். தேசசேவை செய்யவேண்டுமென்ற ஒரே எண்ணமுள்ளவனுக்கு எந்த உத்தியோகமாயிருந்தா லென்ன? என்னுடைய முயற்சியாலும், கிளர்ச்சியாலும் என்னிடத்தில் படிக்கும் ஒவ்வொரு மாணவனையும் பிற்கால இந்தியாவின் சுதந்திர வீரனாகச் செய்வேன். நம் அடிமை காட்டிற்கு நான் செய்வது இந்த ஒரு சிறிய தொண்டாக இருக்கட்டும்.

நான் மெதுவாக வேலைசெய்ய ஆரம்பித்தேன் "பிற்கால இந்தியா" என்னும் பிரச்சினையைக் காட்டிலும் நாளைக்கு வரும் பரிக்ஷையே முக்கியமான விஷயமாக இருந்தது. இலக்கணத்திற்கும், கணிதத்திற்கும் புறம்பாக ஏதேனும் சொல்லிக்கொடுத்து விட்டால் என் பள்ளிக்கூடத்தின் தலை

மை ஆசிரியர் கோபித்துக் கொள்கிறார். சில மாதங்கள் செல்லவும் என்னுடைய முயற்சி தளர்ச்சி அடைந்தது.

நான் ஒரு பெரிய மேதாவி அல்ல. நாம் வீட்டிலிருந்து கொண்டு பெரிய கோட்டைகள் கட்டிவிடலாமென்று கனவு காணலாம். ஆனால் உண்மையாக வேலை செய்ய உள்ளி றங்கினால், வயல்களில் உழும் எருதுகளைப்போன்று சூரி யஸ்தமானதும் கடிப்பதற்கு ஏதாவது வைக்கல் கிடைக்காதா வென்று திருப்திபட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

பள்ளிக்கூடத்தை இரவில் நெருப்பு முதலியவைகளினின் றும் பாதுகாப்பதற்கு ஒரு உபாத்தியார் அங்கேயே இர வில் தங்கி யிருப்பது வழக்கம். நான் விவாகமாகாதவனான படியால் அந்தவேலை எனக்கு இடப்பட்டிருந்தது. பள்ளிக் கூடத்திற்கு அடுத்துள்ள குளிர்ந்த குடிசையிலுள் நான் வசித்து வந்தேன். நாணிருக்கும் பாடசாலை ஒரு கண்மா யின் ஓரத்திலும், கிராமத்திலிருந்து சற்று தூரத்திலும் இருந்தது. பாடசாலையைச் சுற்றி எங்கும் தென்னை, வாழை மரங்களும் வெற்றிலை கொடிக்கால்களும் நிரம்பி யிருந்தன. அங்கு வளர்ந்த பழயகாலத்து மரங்கள் எங்கோ த்திலும் குளிர்ந்த நிழலை தருவனவாயிருக்கும்.

* * *

ஓரு விஷயம் சொல்ல மறந்து விட்டேன். அதாவது நான் இதுவரையிலும் சொல்வதற்கு உகந்த விஷயமென்று கருதவில்லை. அவ்வூர் சர்க்கார் வக்கில் ராம்லோச்சன்ரே என்பவன் பள்ளிக்கூடத்திற்குச்சமீபத்திலுள்ள சிறு வீட்டில் வசித்து வருகிறான் என்பதே. அதோடு அவனுடைய இள மனைவி,—என்னுடைய பால்ய சினேகிதை ஸுரபாலா—அவனுடன் இருக்கிறாளென்பதும் தெரியும்.

கொஞ்ச நாளில் ராம்லோச்சனோடு சந்தித்து பழக்கப் படுத்திக்கொண்டேன். அது என்னமோ நானும் ஸுரபால் வும் பால்ய சினேகிதர்கள் என்பது அவனுக்குத் தெரியுமா வென்பது எனக்கு சந்தேகமாயிருந்தான். நான் முதலில் அவனோடு பழகும் போது இவ்விஷயத்தைச் சொல்லுவது அவ்வளவு உசிதமல்ல வென்று நினைத்து விட்டு விட்டேன்.

ஒரு விடுமுறை நாளன்று ராம்லோச்சன் இல்லம் சென்றி ருந்தேன். நாங்கள் அப்போழுது தர்க்கித்த விஷயம், பரிதா

பத்திற்குரிய. "தற்கால இந்தியா" என்பது பற்றிதான் என்பதில் சந்தேகமில்லை. ஹோங்கா அடித்துக்கொண்டே ஒருமணிநேரம், இரண்டுமணி நேரங்களுக்கு அரட்டையடித்துக்கொண்டிருப்பதற்கு இதைவிட வேறு பொருத்தமான விஷயம் அகப்படாதல்லவா?

நாங்கள் இந்த சம்பாஷணையில் ஈடுபட்டிருக்கும் பொழுது, பக்கத்து அறையிலிருந்து, கையிலும் காலிலும் அணிந்திருக்கும் கொலுசுகளின் மெல்லிய ஓசையும் ஒருஜோடி கமலபாதங்கள் அடி எடுத்துவைக்கும் அரவமும் கேட்டது. அதோடு தட்டியிலுள்ள இரு சிறு கண்கள் என்னைக் கவனித்துக்கொண்டிருப்பதைத்திட்டமாக அறிந்தேன். அந்த நிமிடத்திலேயே அந்த ஒரு ஜோடி கண்கள்-கருப்பு மைதீட்டிய கண்கள்—என் ஞாபகத்திற்கு வந்தன. என் பணிகளை செய்து வந்த என் அருமைத்தோழி ஸோபாலாவின் விஷமச்சிரிப்பு என் மனக்கண்முன் மின்னல்போல் பளிச்சென்று தோன்றிமறைந்தது, என்னால் இதைநினைத்துப் பார்க்க சகிக்க முடியவில்லை. திடீரென என் ஹிருதயத்தை இரும்புப்பிடியாகப்பிடித்து எனக்கு கோவு கொடுத்தது. நான் அப்பொழுதே என் விடுதிக்கு திரும்பிவிட்டேன். நான்என்ன வேலை செய்தாலும், எழுதினாலும், படித்தாலும் என்னுடைய ஹிருதயத்தின் கனத்தை அசைக்க முடியவில்லை. ஒரு கனத்த பாரம் என் ஹிருதயத்தில் தொங்கிக்கொண்டிருப்பதாக எனக்குத்தோன்றியது.

* * *

அன்று அந்தி வேளை. மனதைச்சிறிது சமாதானப்படுத்திக்கொண்டு நானாகயோசித்தேன். எனக்கும் என்னுடைய மனசாக்ஷிக்கும் பின்வரும் மானசீக சம்பாஷனை நடந்தது.

"இப்பொழுது எனக்கு என்ன வந்துவிட்டது?" என்றேன் நான்.

"ஆமாம். இப்பொழுது உன்னுடைய ஸோபாலா எங்கே இருக்கிறாள்?" என்றது என் மனதிலிருந்து பதில்.

"ஏன், நான் மனப்பூர்வமாகத்தான் அவளை விட்டகன்றேன். நிச்சயமாக அவள் எனக்காகக் காத்திருக்கும்படி நான் எதிர்பார்க்கவில்லை" என்று பதில் சொன்னேன்.

"நீ அவளை முன்பு லேசாக அடைந்திருக்கலாம். ஆனால் இப்பொழுதோ, நீ அவளை ஒரு சடலைகூட பார்ப்பதற்கு அருகதை அற்றவன். நீ சிறுவனாகயிருந்தபொழுது ஸோரபாலா உன் பக்கம் சமீபமாக வரலாம். அவள் சந்தோஷத்தால் ஆடும்பொழுது அவளுடைய கை வளையல்களின் இனிய சப்தத்தைக்கேட்டு ஆனந்திக்கலாம். அவளுடைய கொண்டையில் சூடியிருக்கும் பலநிற மலர்களின் நறுமணத்தை நுகரலாம். ஆனால்-ஆனால் இப்பொழுதோ உங்கள் இருவருக்கும் ஊடே ஒரு சுவர் இருக்கிறது"

"அதினாலென்ன? இவ்வுலகில் ஸோரபாலா எனக்கு என்ன வேண்டும்?"

"ஆம். அது உண்மைதான். இன்று ஸோரபாலா உனக்கு ஒன்றும் வேண்டியவையில்லை தான். ஆனால் அவள் என்ன உனக்கு உரியவளாய் இருந்திருக்கலாகாது?"

"ஆ! அது உண்மை. என் அவள் எனக்கு உரியவளாக இருந்திருக்கலாகாது? எல்லாப்பொருள்களைக்காட்டிலும் என் பாகவும், உலகத்திலுள்ள மற்றெல்லா வஸ்துக்களைக் காட்டிலும் நெருங்கியவளாகவும், என்னுடைய இன்பதுன்பங்களுக்கு பங்காளிபாகவும், அவள் இருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுதோ, எனக்கும் அவளுக்கும் வெகுதூரம். நான் அவளைப் பார்ப்பது தடுக்கப்படுகிறது. அவளோடு பேசுவது தகுதியற்றது. அவளை நினைப்பதோ பெரும் பாபமாகக் கருதப்படுகிறது. ஆனால் இந்த ராம்லோச்சன், எங்கிருந்தோ திடீரென வந்து, ஏதோ இரண்டு மந்திரங்களை முணுமுணுத்து விட்டு, ஸோரபாவையை மற்ற மனிதவர்க்கத்தினரிடமிருந்து 'அடித்து'க் கொண்டு போய்விட்டான்".

நான் ஒரு புதிய தத்துவத்தை போதிக்க வரவில்லை. அல்லது ஒரு வகுப்புப் புரட்சி செய்ய விரும்பவில்லை. என்னுடைய மனதிலெழுந்த உண்மையான நினைப்பை தெரியப்படுத்த விரும்புகிறேன். ஒரு வேளை என்னுடைய நினைப்பு சரியானதாய் இல்லாமல், முகாந்திரா மற்றதாய் இருக்கலாம். ஆனால் அவள்—ராம்லோச்சன் இல்லத்தில் அரசு செலுத்திக்கொண்டிருக்கும் அவள்—ராம்லோச்சனைக் காட்டிலும் எனக்கு உரியவள் என்னும் விஷயத்தை என் மனதிலிருந்து மறைக்க முடியாது. இந்த நினைப்பு யோக்யமற்றதும், தகாததும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் என் நினைப்பு இயற்கைக்கு விரோதமானதல்லவே!

அதற்கப்பால் என்னால் எந்த வேலையும் சரியாகச் செய்யமுடியவில்லை. இந்த உலகமே பாழடைந்தது போலிருந்தது என்று மட்டும் நிச்சயம் செய்து கொண்டேன். "இந்தியாவின் இந்த பிற்கால நம்பிக்கைகளின்" கணிதப்பிழைகளை திருத்திக்கொண்டே நம் வாழ்நாட்களை கழிக்க விரும்பவில்லை என்பதுதான்.

அன்றைய நிகழ்ச்சி முடிந்ததென அறிவுறுத்தும் கலாசாலையின் மணியோசை செவியில் சாய்ந்தது. சந்தோஷத்தால் துள்ளிக்குதித்து வீடு நோக்கிச்செல்லும் சிறுவர் சிறுமியரின் குரல்களும் வரவர தூரத்தில் கேட்டது. நான் மட்டும் என் பள்ளிக்கூட வீட்டில் தனியாக இருக்க விரும்பவில்லை. அஸ்தமனமாகும் கதிரவனின் கிரணங்கள் முகபிம்பாரத்தில் படும்படியாக மேற்கு நோக்கி கண்மாயின் கரையோரத்தில் போய் கீழே உட்கார்ந்தேன். அருகிலுள்ள தோட்டத்தின் புஷ்பங்களின் மீது தவழ்ந்துவந்து, தென்றல் காற்று மனதிற்கு ஒரு இன்பத்தையும் சாந்தியையும் கொடுத்தது.

மனிதவர்க்கம் தவறுதல்களால் நிறையப்பெற்ற ஒரு சமூகம். சரியான வேலையை சரியான நேரத்தில் செய்யவேண்டுமென்ற எண்ணம் ஒருவருக்கும் ஏற்படுவதில்லை. ஆனால் காலம் தவறியவுடன், சென்ற விஷயத்தைப்பற்றி, ஆகாத காரியங்களை நினைத்து 'மண்டையை உடைத்துக்கொள்வது' வழக்கமாகிவிட்டது. நான் ஸுரபாலாவை மணந்து இன்பகரமாக என் வாழ்க்கையை நடத்தியிருக்கலாம். நானோ ஒரு கரிபாலிடியாக வர விரும்பினேன். கடைசியில் ஒரு கிராம பாடசாலையின் உதவி உபாத்தியாயரின் வேலையில் தான் என் வாழ்க்கை முடிந்தது. ஆனால் இந்த ராமலோச்சன், ஸுரபாலாவை முன்பின் அறிமுகமில்லாதவனாயிருந்தும், இன்று அவளை மணந்து சர்க்கார் வக்கீலாக கல்லகாசு சம்பாதிக்கிறான். அவள் செய்யும் சமையல் அவன் நாவிற்கு ருசியாகத்தெரியாவிட்டால் அவளை கடிந்துரைக்கின்றான். அவன் கல்ல சந்தோஷமான சந்தர்ப்பத்தில் இருக்கும்பொழுது, அவளை தன் மடியில் இறுத்தி அவள் அதரங்களில் முத்தமிடுகின்றான். அவன் எவ்வித கவலையுமில்லாமல் உல்லாசமாகத் திரிகின்றான், ஆனால் அவன் என்னைப்போல் எரிக்கரையில் உட்கார்ந்து கொண்டு ஆகாயத்தையும் அதிலுள்ள விண் மீன்களையும் கண்டு ஏங்கிக்கொண்டிருப்பதில்லை.

ஒரு பெரிய வழக்கு சம்பந்தமாக ராம்லோச்சன் பாடி சில தினங்கள் பக்கத்து ஊருக்கு செல்லவேண்டியதாயிருந்தது. நான் எப்படி என் பள்ளிக்கூடவீட்டில் தனிபாக இருந்தேனோ, அதைப்போல ஸுரபாலாவும் தன் வீட்டில் தனனந்தனியாக இருந்தாள்.

அது ஒரு திங்கட்கிழமை என்பது என் ஞாபகம். ஆகாயத்தில் அடர்ந்த கருமேகங்கள் எங்கும் பரவியிருந்தன. ஒரு பெருமழை பெய்வதற்கு உண்டாகும் அம்சங்கள் எல்லாம் தெரிந்த எங்கள் தலைமை உபாத்தியாயரும் பாடசாலைக்கு விடுமுறை அளித்துவிட்டார். அன்று பகல் முழுவதும் ஓபாத பெருமழை. இரவில் மழையோடு, புயற்காற்றும் சேர்ந்து கொள்ள, மின்னலும் இடியும் அதிகமாயிற்று.

இப்பேர்பட்ட இரவில் தூங்க விரும்புவது சோம்பேறித்தனமல்லவா. இந்த நேரத்தில் இயற்கையாக என் மனம் ஸுரபாலாவின் பக்கம் சென்றதில் ஆச்சரியமில்லை. இந்த அகாத மழையில் ஸுரபாலா தன் சிறிய வீட்டில் தனிமையாக இருப்பாள் என்ற எண்ணம் நினைவிற்பட்டது. எங்கள் பள்ளிக்கூடம் அவளுடைய வீட்டைக்காட்டிலும் உறுதியாகக் கட்டப்பட்டது. ஆகையால் அவளை நம் பள்ளிக்கூடத்திற்கு அழைத்து வந்து இருக்கச்செய்து, நாம் தனியாக வெளியில் போய்விடலாம். என்று அநேக தடவை யோசனை செய்தேன். ஆனால் என் கோழை மனதில் அப்பொழுது அவ்வளவு உலக்கம் பிறக்கவில்லை.

கடல் அலைபோல் தண்ணீர் வீட்டிற்குள் பாய ஆரம்பித்தது, காலையில் மணி ஒன்றடித்து முப்பது நிமிஷம் இருக்கும் வேளையில் கண்மாயின் கரை உடைந்ததுதான் இவ்வெள்ளப் பெருக்கின் காரணம் என்பதில் ஐயமில்லை. நான் என் அறையினின்றும் நீங்கி, ஸுரபாலாவின் விடுதியின் பக்கம் சடுதியில் ஓடினேன். கண்மாயின் கரைமேலே ஏறிச் செல்லும்பொழுது என் முழங்கால் அளவிற்கு தண்ணீர் பெருகியிருந்தது. சமநிலத்திலிருந்து கண்மாய் கரையின் உயரம் பதினேழு அடி! நான் கரையில் ஏறிக்கொண்டிருந்த சமயம், எதிர் கரையிலிருந்து மற்றொரு உருவம் நெருங்கிக் கொண்டிருப்பது தெரியவந்தது. அவள் யாரென்பதை என் உடைய சித்தப்பிரமை கொண்ட அங்கங்களின் ஒவ்வொரு அணுக்களும் லேசாக அறிந்துவிட்டன. அவளும் கண்

யாரென்று தெரிந்துகொண்டாள் என்பதில் சந்தேகமில்லை. மூன்று சதுரகஜ விஸ்தீரணமுள்ள தீவில் நாங்கள் இருவரும் நின்றுகொண்டிருந்தோம். மற்றெல்லாவிடங்களும் நீரால் நிரம்பப்பெற்றிருந்தன. இந்த வேளை ஒரு சோதனை நேரம். இருண்ட ஆகாயத்தில் நக்ஷத்திரங்களின் அடையாளமே தெரியவில்லை.

இந்த நேரத்தில் நாங்கள் சம்பாஷித்திருந்தால் எதும் குற்றமிருந்திருக்காது. ஆனால் எங்கள் இருவராலும் எந்த வார்த்தையும் பேசிக்கொள்ள முன்வர முடியவில்லை. வழக்கமாகக் கேட்கப்படும் மற்றவரின் சுகக்ஷேமங்களைப்பற்றிகூட எங்களில்ஒருவராவதுமற்றவரை விசாரித்துக்கொள்ளவில்லை. நாங்கள் இருளைப்பார்த்து விழித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தோம். எங்கள் காலடியில் 'இறப்பு' என்றும் நியதி தத்தளித்துக்கொண்டிருந்தது.

இன்று ஸோரபாலா உலகத்தையே துறந்து விட்டு என் பக்கம் வந்து விட்டாள். இன்று அவளுக்கு என்னைத்தவிர வேறு ஒருவருமில்லை. எங்களுடைய பழங்கால குழந்தைப் பருவத்தில் மாயை என்னும் பிரபஞ்சத்திலிருந்து, இந்த அதிசய மனித வர்க்கங்கள் நிறைந்த உலகத்தில் என் பக்கத்தில் வந்து நின்றாள். வெகு நாட்களானபின் இன்று இறப்பு என்னும் இயற்கை பேயின் கண் முன் என் பக்கத்தில் தனியாக வந்து நிற்கிறாள். பிறப்பு என்னும் நீரோடை ஒரு மலரின் மெல்லிய மொட்டாக என் முன் கொணர்ந்தது. இறப்பு என்னும் வெள்ளம் அதே அரும்பை நன்றாக மலர்ந்த புஷ்பமாக எனக்குக் கொண்டு வந்திருக்கிறது. இன்னும் ஓரே ஒரு அலைதான். இந்த உலகத்தின் கடைசியான இடத்திலிருந்து அடித்துக்கொண்டு போகப்பட்டிருப்போம், இருவரும் ஒன்றாக இறந்துகொண்டே.

ஆ! அது எப்பொழுதும் வராமலிருக்கட்டும்! ஸோரபாலா தன் கொழுனன், குழவியர், உறவினர் சூழ சுகமாக நீண்ட காள் வாழட்டும்! இயற்கையின் அழிப்பு வேலையில் ஈடுபட்ட இந்த ஒரு இரவில்தான் இயற்கையை மீறிய ஒரு அனுபவத்தை நுகர்ந்தேன்.

இருளும் நீங்கியது, புயற்காற்றும் ஓய்ந்தது. பிரவாகமும் தணிந்தது. ஒரு சிறு வார்த்தைகூட பேசாமல் ஸோரபாலா

தன் இல்லம் திரும்பினாள். நானும் ஒரு வார்த்தையும் உச்சரிக்காமல் என் விடுதிக்குத் திரும்பிச் சென்றேன்.

சென்று பின்வருமாறு என் மனக்கண்ணாடியில் பிரதிபலித்தேன். "உண்மை தான்! நான் நாஜிராக வில்லை. கச்சேரி தலைமை குமாஸ்தாவாக ஆகவில்லை, அல்லது கிராமபோன் டியாகவில்லை. என்னால் ஒருபிச்சைக்காரப்பள்ளிக்கூடத்தின் உபஉபாத்தியாயராகத்தான் வர முடிந்தது. இருந்தாலும் என்னுடைய பரந்த வாழ்நாளில் இந்த மகோன்னத இரவில் தான் என்னுடைய வாழ்க்கையின் ஒளி பிரகாசித்தது. நான் இவ்வுலகில் இருந்த எல்லா பகல் இரவுகளிலும் இந்த ஒரே இரவு தான் என்னுடைய தாழ்மையான வாழ்வில் மகத்துவம் பொருந்தியதாயிருந்தது"

செயற்கைக் கன்று பிறந்தது.

இயற்கைக்கு எதிரான வேலை.

படைப்பவன் பிர்மனா? விஞ்ஞானியா?

ஹாலந்தில் ஒரு காளையிருக்கிறது; இங்கிலாந்தில் ஒரு பசு இருக்கிறது; இவ்விரண்டுக்கும் சமீபத்தில் ஒரு கன்று பிறந்துளது. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு அறிஞர்களது மூளையிலே ஒரு விஷயம் பளிச்சென்று தட்டுப்பட்டது. அதாவது கால்நடைகளுக்குள்ளே உயர்ந்த ஜாதி ஒன்று உற்பத்தி செய்யவேண்டும் என்பதே. உதாரணமாக ஹாலந்தில் ஒரு காளை யிருக்கிறது. இங்கிலாந்தில் ஒருபசு இருக்கிறது. இவ்விரண்டும் உயர்ந்த ஜாதியைச்சேர்ந்தவை. இவற்றிற்குக் கன்று பிறந்தால் அது இன்னும் உயர்ந்த ஜாதியாயிருக்கும். ஹாலந்திலிருந்து மாப்பிள்ளைக் காளையை இங்கிலாந்துக்குக் கொண்டு வருவதா? அது வீண் சிரமமாயிற்றே. அதற்காக என்ன செய்தார்கள்? காளையின் 'விந்து'வை யெடுத்து செயற்கை மூலம் கருவுண்டு பண்ணினார்கள். அவ்விதமாக இப்பொழுது ஒரு கன்று பிறந்துளது.

அதைத்தபடியாக இந்த நிபுணர்கள் என்ன செய்வார்களோ? மனித சமூகத்திலே இவ்வாறு ஏதாவது வேலை செய்ய அவர்கள் முன்வந்தால் எப்படியிருக்கும்?

கிண்டல்

தடைக்குகள்.

(கே. தில்லை நடராஜன்)

பிரார்த்தனை.

கந்தன்:—கடவுளுக்குப் பிரார்த்தனை செலுத்துபவர்கள் மயிரை மட்டும் கொடுப்பதேன்? கண், காது, மூக்கு, கை, கால் இவைகளில் ஒன்றை ஏன் கடவுளுக்கு சமர்ப்பிக்கலாகாது?

நந்தன்:—மயிரைச்சிறைத்தால் வளர்த்துவிடுமே, மற்றவை வளருமா? கையை வெட்டினால் மறுபடியும் முளைக்கப்பண்ணச் சர்வசக்தி வாய்ந்த கடவுளாலும் முடியாதென்பதை பக்தர்கள் உணர்ந்திருக்கலாம்!

"இளந் தமிழன்"

* * *

தேசத்துரோக சந்தேகம்.

தேச பக்தன்:—சகோதரர்களே! உலகம் கெட்டுவிட்டது. காந்தி மகான் விருப்பத்தின்படி இனிமேல் சகலரும் அவரவர் சர்தித்தொழிலை மேற்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் க்ஷேமமடையும்.

கூட்டத்தில் ஒருவர்:—ஐயா! ஒரு சந்தேகம். அப்படி கடக்க வேண்டுமானால் காந்தி சேட்டியார் வட்டிக்கடையல்லவோ நடத்த வேண்டும்? அப்புறம் ராஜகோபால ஆச்சாரியார் தர்ப்பைபுல்லையும் பஞ்சாங்கக் கட்டையும் தூக்க வேண்டியதுதானே?

தேசபக்தன்:—ஓ! இது தேசத்துரோகியின் சந்தேகம். இதற்குப் பதில்சொல்வதே பாவம். மகாத்மா காந்திக்கு...ஜே!

* * *

மலைபோன்ற நம்பிக்கை.

சோதிடன்:— சுவாமி! தூண்பப்படும் உள்ளம்: கஷ்ட ஜீவனம். மலைப்போல் வந்தாலும் பனிபோல் விலகிப்போ குும். பயப்படாதீர்கள்!

அய்ய :— (ஸ்தம்பித்து நின்றுவிட்டார்)

சோதிடன்:— என் மயங்குகிறீர்கள்? நான் சொல்வதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. கட்டாயம் நடக்கும். நீங்கள் எதைக்குறித்துக் கேட்டீர்கள்?

அய்யர்:— உம்.....ர்ம காங்கரஸ் தான் பதவி யேற் றுக் கொண்டதே இனி நமக்கெல்லாம் என்ன குறை யிருக்கப் போகிறதென்று காங்கரசை பெரிய மலைபோல நம்பினேன், நீ பனிபோல விலகிப்போகும் என்கிறாயே. உன் வாக்குப் பலித்து விட்டால் என்ன செய்வதென்றுதான் யோசிக்கிறேன்.

* * *

ஸ்தல மகிமை.

சுப்பையருக்கு வயசு 50. அவர் மனைவிக்கு வயசு 21. இரண்டாம் தாரம். "ஒரு குழந்தை பிறக்கவில்லையே" என்று அய்யருக்கு நிரம்ப வருத்தம். பக்கத்துவீட்டு முதலி யார் யோசனை கூறினார் "காசிக்குப் போய் வாருங்கள். குழந்தை யுண்டாகும்" என்று. அய்யரும் புறப்பட்டுச் சென் றார். சென்றவர் 6-மாதங்களுக்குப் பிறகு ஊர் வந்து சேர்ந் தார். மறுநாள் அய்யர் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தார்.

விருந்தாளி:—என்ன சுப்பையர்வாள்! ரொம்ப நாளாய்க் குழந்தை யில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தீர் களே, இப்பொழுது ஏதாவது குழந்தைக் குஞ்சுகளுண்டோ?

சுப்பையர்:— காசிக்குப் போனால் பயனேற்படுமென்று பக்கத்துவீட்டு முதலியார் சொன்னார். கானும்போய் 6-மாத மாகிறது. நேற்றுத்தான் வந்தேன். ஆண்டவன் கிருபை யால் வீட்டில் ஐந்துமாத கர்ப்பம்! ஸ்தல மகிமையே மகிமை!

★

உண்மை யுணர்ச்சி.

(இங்கர்சால்)

தன் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்காகவும், மனோதாங்களை நிறைவேற்றுவதற்காகவும், ஆனந்தனைப் பூர்த்தி செய்வதற்காகவும் பல்லாயிரக்கணக்கான வருஷங்கள் இடையறாது உழைத்து மனிதன் தன் மூளையை விருத்தி செய்து தன் கால்களில் இரண்டை காண்களாக மாற்றிக்கொண்டான். அப்பால் பகுத்தறிவொளியை ஓளவு தன் இருண்ட மூளைக்குள் செலுத்தினான். அறியாமை, பயம், தவறு முதலியன அவனது முயற்சிக்கு இடையூறுகளாக இருந்தன.

எனினும் அவன் சலியாது உழைத்து உண்மையைக் கண்டு கொண்டான்.

உண்மையை உணர உணர அவன் அதிதீவிரமாக முன்னேறிச் சென்றான்.

பன்னூற்றாண்டு காலம் இருளில் உழன்று, சாணேறமுழம் சறுக்கி விழுந்து, மீண்டும் மீண்டும் முயன்று கடைசியாக ஒளியைக் கண்டு கொண்டான்.

ஜோசியர்களும், தீர்க்க தரிசிகளும், மதாச்சாரியார்களும், புரோகிதர்களும், பூசாரிகளும் முட்டுக்கட்டை போட்டு அவனது முன்னேற்றத்துக்குத் தடையாக நின்றார்கள்.

ஞானிகள் அவனைக் காட்டிக்கொடுத்தனர்; மதாச்சாரியார்களும் அவதார புருஷர்களும் அவனைத் தப்பு வழியில் செலுத்தினர்; பேய் பூதங்கள் அவனை அச்சுறுத்தின. ஜாதித்தலைவர்களும் அரசர்களும் அவனை அடிமைப்படுத்தினர். பலிப்பீடங்களும் சிம்மாசனங்களும் அவனைக் கொள்ளையிட்டன.

கல்வியின் பெயரால் தப்பெண்ணங்களும், குருட்டு நம்பிக்கைகளும், அற்புதங்களும், திருவிளையாடல்களும் அவனது உள்ளத்து வலுக் கட்டாயமாகப் புகுத்தப்பட்டன.

மதத்தின் பெயரால் வணக்கமும், ஆணவமும், விருப்பும், வெறுப்பும், மன்னிப்பும், வஞ்சமும், பழிக்குப்பழி வாங்குதல் முதலியனவும் அவனுக்குப் போதிக்கப்பட்டன.

ஆனால் உலகம் மாற்றமடைந்து கொண்டே இருக்கிறது.

புராணப் பொய்க்கதைகளிலும், காட்டு யிராண்டி மதாசாரங்களிலும் நமக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது.

அந்தகார இருளிலே, பல தப்புகளுக்கு இடையிலே இலைமறைகாய் போல் ஒழிந்து கிடக்கும் உண்மையை—ஒளியைக் கண்டுபிடிப்பதே யாவற்றிலும் முக்கியமானது; மேன்மையானது.

உண்மையே உலகத்தின் ஞானச்செல்வம்.

உண்மையாராய்ச்சியே யாவற்றிலும் மேலான தொழில்.

ஜோதிமயமான முன்னேற்ற மாளிகைக்கு அடிப்படையாகவும் ஸ்தூபியாகவும் இருப்பது உண்மையே.

உண்மை ஆனந்தத்தின் தாய். உண்மை மக்களை நாகரீகப்படுத்துகிறது, உண்மை மக்கள் உள்ளத்திலே உன்னத லட்சியத்தைத் தோற்றுவிக்கிறது; மக்கள் உள்ளத்தைப் புனிதப் படுத்துகிறது.

உண்மையை அறிவதை விட உயர்வான லக்ஷியம் மக்களுக்கு இல்லவே இல்லை.

நன்மை செய்வதற்கான அபார சக்தியை உண்மை மனிதனுக்குக் கொடுக்கிறது.

உண்மையே கட்கமும் (வாள்) கவசமும்.

உண்மையே ஜீவியத்தின் புனித ஒளி

உண்மையைக் கண்டுபிடிக்கும் மனிதன் வாடா விளக்கு ஏற்றுகிறான்.

பகுத்தறிவின் உதவியால் ஆராய்ச்சி செய்து, சோதனை நடத்தி, உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அவரவர் ஆற்றலுக்கும் விருப்பத்துக்கும் தக்கபடி உண்மையைக் கண்டுபிடிக்க ஒவ்வொருவருக்கும் வசதியளிக்க வேண்டும். உலக இலக்கியங்களெல்லாம் மக்களுக்குப் பொது.

அதை எல்லோரும் படிக்க வசதியிருக்க வேண்டும்; எத்தகைய தடையும் இருத்தல் கூடாது.

சாமானிய மக்களால் அறிய முடியாதபடி எந்த விஷயமும் அவ்வளவு உயர்வானதல்ல— புனிதமானதல்ல.

நூல்களை சுயமாக வாசித்து அவரவருக்கு விருப்பமான முடிவுக்கு வர ஒவ்வொருவருக்கும் வசதியும் சுதந்தரமும் அளிக்க வேண்டும்.

அவனவனுக்குத் தோன்றும் உண்மையான அபிப்பிராயங்களை வெளியிடவும் தடையேற்படுத்தக் கூடாது.

ஆராய்ச்சி.

ஆராய்ச்சியாளருக்கு இவ்வுலகத்திலோ மறுவுலகத்திலோ தண்டனையளிப்பதாகப் பயமுறுத்துகிறவர்கள் மனித சமூகத்தின் துரோகிகள் ஆவார்கள்.

மோட்சம் வாங்கிக் கொடுப்பதாக ஆராய்ச்சியாளருக்கு ஆசைவார்த்தை கூறி அவர்களைத் தப்பு வழியில் செலுத்துகிறவர்கள் தேசத்துக்கும் மக்களுக்கும் துரோகிகள் ஆவர்.

மனித பயமோ கடவுள் பயமோ இல்லாத சுதந்தர நிலையிலுள்ளவர்களுக்கே உண்மையான ஆராய்சி நடத்த முடியும்.

பகுத்தறிவை முன்நிறுத்தியே எல்லா ஆராய்ச்சிகளும் நடைபெறவேண்டும்.

ஒவ்வொருவனும் தனக்கும் மனச்சாட்சிக்கும் உண்மையுடையவனாக இருக்கவேண்டும்.

தன் மனத்தையே ஆராய்ச்சிச் சாலையாக பாவித்து ஒவ்வொருவரும் பிரபஞ்ச உண்மைகளைக் கண்டு அறிய வேண்டும்.

பகுத்தறிவுக்குப் பொருத்தமான உண்மையே அனைவருடையவும் வழிகாட்டியாகவும் எஜமானாகவும் இருக்கவேண்டும்.

இம்மாதிரியான ஆராய்ச்சியின் பேரில் கண்டு பிடிக்கப்பட்ட உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகுவதே மேலான ஒழுக்கம்.

உளத் தூய்மைக்கு இந்த உண்மையே அடிப்படை. உளத்தூய்மையுடையவனே வீர புருஷன்; சுதந்தரன்.

திருச் சபைகள், மடாதிபதிகள், மத குருமார், அரசியல் கட்சிகள், அரசர்கள், தெய்வங்கள் ஆகியவற்றின் கட்ட

ளைக்குக் கீழ்படிந்து பகுத்தறிவுக்கு துரோகம் செய்பவன் அடிமையாவான்.

சுயமாகச் சிந்திப்பதும் ஆராய்ச்சி செய்வதும் மக்கள் உரிமை மட்டுமல்ல, நீங்காக் கடமையாகும்.

எனவே வலுக்கட்டாயமாகப் பயமுறுத்தி உண்மை யாராய்ச்சிக்குத் தடையுண்டு பண்ணுகிறவன் மக்களை அடிமைப்படுத்தி வருபவனாவான்.

தன் உணர்வேயொருவனுக்கு விலையுயர்ந்த ஆபரணம்; எனவே அதனைப் புனிதமாக வைத்திருக்க ஒவ்வொருவனும் முயலவேண்டும்.

மனத்தில் தோன்றும் விஷயங்களையெல்லாம் விருப்போ, வெறுப்போ; பற்றோ, பயமோ இன்றி அமைதியாக ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டும்.

உண்மையை அறிவதே ஒரே நோக்கமாக இருக்கவேண்டும். பகுத்தறிவுப்படி நடந்தவன் ஒருவன் காணும் உண்மையினால் அவனுக்குத் தீமையுண்டாகவே செய்யாது; பகுத்தறிவை மீறினால் நிச்சயமாகத் தீமையே உண்டாகும்.

ஆராய்ச்சி செய்கிறவன் தன் முன்னிற்கும் ருசுக்களையும்—வாதங்களையும்— சோபதாபங்களாலும் விருப்பு வெறுப்புகளாலும் அசைக்க முடியாத தராசில் எடைபோட்டுப் பார்க்கவேண்டும். ஆராய்ச்சியாளர் ஆட்களையோ பதவிகளையோ லக்ஷியம் செய்தல் கூடாது; வெகுகாலம் பழக்கமாயிற்றே, ஆசாரமாயிற்றே என்று அஞ்சவும் கூடாது.

பகுத்தறிவாளி.

பகுத்தறிவுக்கு முரணான எதையும் லக்ஷியம் செய்யவே கூடாது.

பகுத்தறிவுடையோருக்கு ஒரு தனி யுலகுண்டு; அந்த உலகத்துக்கு அவனே ராஜாவாயிருக்க வேண்டும். அவனது ஆத்மாவே அந்த ராஜ்யத்தின் மணி முடியை அணியவேண்டும்.

அந்த நாட்டிலே மிருகபலம், பயம் முதலியன இருத்தலே கூடாது; அவற்றிற்கு அங்கு இடமே இல்லை.

துரபிமானம், அகங்காரம், வெறுப்பு, இகழ்ச்சி, அலக்ஷியம் முதலியன உண்மைக்கும் முன்னேற்றத்திற்கும் சத்துருக்களாகும்.

உண்மை ஆராய்ச்சியாளன், ஒன்று பழமையானது என்ற காரணத்தினால் அதை ஒப்புக்கொள்ளவோ, புதியது என்ற காரணத்தினால் அதை நிராகரிக்கவோ செய்ய மாட்டான்.

கால்ஞ் சென்றவர்கள் புனிதமானவர்கள் என்று எண்ணி அவர்கள் கூறுகிறவைகளை எல்லாம் உண்மை ஆராய்ச்சிக் காரன் நம்பமாட்டான்; உயிரோடு இருப்பவர்கள் கூறுவன வற்றை மறுக்கவும் அவன் தயங்கமாட்டான்.

வார்த்தைகளில் அடங்கியுள்ள உண்மையே அவனுக்கு முக்கியம். ஆள் அவனுக்கு முக்கியமே அல்ல. ஒருவன் ராஜாவாகவோ, அடிமையாகவோ, தத்துவ ஞானியாகவோ, ஊழியனாகவோ இருந்திருக்கலாம். அதனால் அவனது வார்த்தைகளுக்குச் சிறப்போ இழிவோ ஏற்பட்டு விடாது. வார்த்தைகள்—யார் கூறினாலும் சரி—பகுத்தறிவுக்கு ஒத்தனவாயிருந்தால் ஒப்புக்கொள்ளப்படும்; மூர்க்கமாயிருந்தால் நிராகரிக்கப்படும். பெருமையும் சிறுமையும் ஆளைப் பொருத்ததல்ல; அறிவைப் பொருத்தது.

பொய்ம்மைக்குத்தான் மாடம், மாளிகை, மணிமுடி, செங்கோல், காவலர், படைகள் முதலியன தேவை.

மெஞ்ஞானிகள் ஆடம்பரத்தை வேண்டார்—அஞ்சார்; படைபலத்தையோ மோஜாரட்டி பலத்தையோ மதியார்.

உண்மையின்மையைகளையே அவர்கள் எப்பொழுதும். முன்னோர் அபிப்ராயத்தையோ, ஆசாரங்களையோ, மதக் கொள்கைகளையோ-பகுத்தறிவுக்கு மூர்க்காக இருந்தால்—அவர்கள் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள்.

உண்மையைக்காண அவர்கள் கானாபக்கங்களிலும் ஆராய்ச்சி செய்கிறார்கள்; எந்த எந்த இடத்து உண்மை காணப்பட்டாலும், வீணபிமானமோ பகையோ காட்டாமல் உள்ளக் களிப்புடன் ஒப்புக் கொள்கிறார்கள்.

பகுத்தறிவும் உண்மையும் உடையவர்கள் பின்பற்றும் வழி இதுவே; இவ்வழியைத் தவிர வேறு எவ்வழியும் அவர்களுக்குத் திருப்தியளிக்காது.

இயற்கை ஆராய்ச்சி.

மக்கள் முயற்சிக்கு எட்டக்கூடிய எல்லாத்துறைகளிலும் உண்மையைக்காணவே அறிவாளிகள் பாடுபடுகிறார்கள்.

ராஜ்பதக்திரி, உலக சரித்திரத்தைப் படித்து சர்வதேசப் புள்ளி விபரங்களை ஆராய்ந்து, தேசங்களின் அழிவுக்குள்ள

காரணங்களைக் கண்டுபிடித்து தன் நாட்டைக் காப்பாற்றிக் கொள்ள வகைதேடுகிறான்.

உண்மையை அடையும் பொருட்டு பூகர்ப்ப சாஸ்திரி பாறைகளை ஊடுருவிப் பார்க்கிறான். பிரபஞ்ச ரகசியங்களை உணரும் பொருட்டு மலையுச்சிகளின் மேல் ஏறுகிறான்; அவிந்துபோன எரிமலை வாய்க்குள் சென்று ஆராய்ச்சி நடத்துகிறான்; தீவாந்தரங்களுக்குச் சென்றும் பரிசோதனை செய்கிறான். உண்மை காண்பதே அவனது நோக்கம்.

ரஸாயன சாஸ்திரி, மூலைசகரண்டி முதலியவற்றின் உதவியால் பல பரிசோதனைகள் நடத்தி பொருள்களின் குணாகுணங்களை அறிய விரும்புகிறான்; ஒவ்வொரு பொருளிலும் பொதிந்து கிடக்கும் இயற்கை ரகசியங்களை அறிய ஆசைப்படுகிறான்.

சிற்பியும் உண்மைஆராய்ச்சியிலேயே பொழுதுபோக்குகிறான். இயற்கைச் சக்திகளை அறிவது அவைகளைத் தம் வழிப்படுத்தவும் சிற்ப சாஸ்திரிகள் முயல்கிறார்கள். அவர்களுக்கும் உண்மையே தேவை.

ஆயுர்வேத சாஸ்திரிகளும் ரஸவைத்தியர்களும் சுற்றுப் பொருள்களை உற்றுநோக்கி, பரிசோதனைகள் நடத்தி, பகுத்தறிவின் உதவியினால் உண்மையை அறிய உழைக்கிறார்கள். மக்கள் உடலிலுள்ள தசைகள், இரத்தம், கரம்பு, முதலியவற்றின் தன்மைகளையும், மூளையின் குணாதிசயங்களையும் அறிய அவர்கள் சதா உழைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

பல திறப்பட்ட சாஸ்திர ஆராய்ச்சியாளரும் இவ்வாறே உண்மையை அறிய முயன்று கொண்டிருக்கின்றார்கள்.

பார்க்குமிடமெல்லாம் உண்மையைக்காண முயல்கிறார்கள், தாம் காணும் உண்மைகளை உலகமக்களுக்குக் கூறுவதே அவர்களது ஜீவித லக்ஷியம்.

அவர்களது தைரியத்தை அவர்களது அறிவுக்கே இணையாகச் சொல்லலாம். இறந்தவர்கள் என்ன சொல்லியிருந்தாலும் சரி, இப்பொழுது உயிர்வாழ்வோர் என்ன கம்பியிருந்தாலும் சரி, அவர்கள் அறிந்ததை உலகமக்களுக்குக் கூறியே தீர்வார்கள். அத்தகைய மனோதைரியம் அவர்களுக்கு மிகவும் அவசியம்.

உண்மையை அறிவதனால் மனிதனுக்கு நலன் ஏற்படுமானால், அறிவுத்துறையில் அயன் சத்தியவாதியாயிருக்கவேண்டியது அவசியமானால், விஞ்ஞானசாஸ்திரிகள் அறிந்த-

உண்மைகளை எல்லாரும் அறிந்திருக்க வேண்டியது இன்றி யமையாததே.

தன் உண்மையான அபிப்பிராயங்களைக் கூற ஒவ்வொரு வனுக்கும் மனோதைரியம் வேண்டும். உண்மையை அறிகிற வர்களும் அதை வெளியிட்டு உலகம் முழுதும் பரவச் செய்ப வர்களும் பொது ஜனோபகாரிகளாகிறார்கள்.

உண்மையான அபிப்பிராயங் கூறுகிறவர்களைத் தடுப்ப வர்கள் நாகரிகத்துக்கும்—மனித சமூகத்துக்கும் சத்துருக் களாவர். தன் அபிப்பிராயங்களைத் தடையின்றிக் கூறத் தனக்குத்தான் உரிமை யுண்டென்றும் மற்றவர்களுக்கு இல்லையென்றும் கூறுபவன் மிக்க ஆணவமுடையவனே.

சில விஷயங்கள் புனிதமானவை யென்றும் அவைகளை ஆராய்ந்து எவரும் உண்மையறியக் கூடாதென்றும் கூற எவருக்கும் அதிகாரமில்லை.

அவை புனிதமானவையென்று யார் சொன்னார்கள்? யார் கண்டார்கள்? நமக்கு உண்மையென்று படாதவைகள் எவ்வாறு புனிதமாகும்?

சுதந்திரப் பேச்சு தெய்வத்துரோகமானது.

சுதந்தரப் பேச்சு தெய்வதூஷணையானதென்று பல நூற்றாண்டு காலம் நம்பப்பட்டு வந்தது. தத்தமக்குத் தோன் றும் உண்மையான அபிப்பிராயங்களைக் கூறுவதைவிட தெய்வத்துரோகமான செயல் வேறில்லை யென்றும் கருதப் பட்டுவந்தது. எனவே பன்னூற்றாண்டு காலம் ஞானிகள் வாய்ப்பூட்டுப் போட்டுக்கொண்டு இருந்து வந்தார்கள்; ஆராய்ச்சியாளர்கள் ஏற்றிய சத்திய தீபம்—விஞ்ஞான வீர் கள் வளர்த்து விருத்தி செய்த சத்திய தீபம்—உண்மையாராய்ச் சிக்காரர் இரத்தத்தினால் அவிக்கப்பட்டது.

உண்மை எப்பொழுதும் சுதந்தரப் பேச்சுக்கு ஆதரவா கவே இருந்து வருகிறது. ஆராய்ச்சி செய்து விஷயங்களை யுணரவே உண்மை எப்பொழுதும் வற்புறுத்துகிறது. சுதந் தரம், விவாதம், நேர்மை, ஆராய்ச்சி, தைரியம் முதலியன உண்மையின் தண்பர்களும் உறவினர்களுமாகும்.

உண்மை, வெளிச்சத்தையும் திறந்த வெளியையுமே எப்பொழுதும் விரும்புகிறது. உத்தமமான மனோதர்மங்களையும் லக்ஷியங்களையும் வளர்ப்பதே உண்மையின் நோக்கம். மனோவிகாரங்களை அடக்கி துவேஷ உணர்ச்சியைக் கொன்று பகுத்தறிவுச்சாதியை வளர்க்கவே உண்மை சதா முயன்றுகொண்டு இருக்கிறது.

மனிதன் கெஞ்சவேண்டுமென்றோ அடிமைப்படவேண்டுமென்றோ உண்மை விரும்பவில்லை, மூடர்களின் வணக்கத்தையோ பயங்காளிகளின் பிரார்த்தனைகளையோ புகழ்ச்சியையோ உண்மை எதிர்பார்க்கவுமில்லை. "சுயமாகச் சிந்தித்துப்பார்; ஒரு கடவுளைப்போல சுதந்தரனாயிரு; உன் உண்மையான அபிப்பிராயங்களைக்கூறும் சீரிய குணத்தையும் தைரியத்தையும் விருத்திசெய்" என்றுமட்டுமே உண்மை ஒவ்வொருவனிடமும் வேண்டிக்கொள்கிறது.

"நாம் ஏன் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்? பகுத்தறிவுக்கு ஒத்தபடி ஏன் ஆராய்ச்சி செய்யவேண்டும்? சிந்தனையிலும் பேச்சிலும் ஏன் உண்மையாக இருக்கவேண்டும்? உண்மையான விஷயங்களை ஏன் ஏற்றுக்கொள்ளவேண்டும்? நமது உண்மையான அபிப்பிராயங்களை ஏன் வெளியிடவேண்டும்" என்பன போன்ற கேள்விகளுக்கு ஒரே ஒரு விடைதானுண்டு. அதாவது "மக்கள் முன்னேற்றத்துக்காக".

மூளையை விருத்திசெய்தாகவேண்டும். மக்கள் சுயமாகச் சிந்திக்க வேண்டும். பேச்சுச் சுதந்திரம் கட்டாயம் வேண்டும். ஆராய்ந்து பாராமல் சுலுவாக நம்பும் குணம் சீரிய குணமல்ல என்பதை உலகம் உணரவேண்டும். பகுத்தறிவாராய்ச்சினாலேயே எல்லா விஷயங்களும் முடிவு காணப்படவேண்டும்.

இம்முறைகளினால் இயற்கைத் தடைகள் பலவற்றை மனிதன் வெல்ல முடியும். அநேக நோய்களை மக்கள் தணிப்பதித்தலாம்; அநேக நோய்கள் வராமல் தடுக்கலாம்; நோவு நொக்காடு குறைக்கலாம்; ஆயுளை நீட்டலாம்; புஷ்டிப்படுத்தலாம்; உயர்வான லக்ஷியங்களை வகுத்துக்கொள்ளலாம். எல்லாத்துறைகளிலும் மனிதனது சக்தியைப் பெருக்கலாம்; தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்; அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தலாம், வீடு, ஆடை, உணவு, விறகு, குடும்பம்

இல்லற இன்பம் ஆகிய அனைத்தும் மக்கள் கைக்கு சுலபமாக எட்டும்படி செய்யலாம்.

வறுமை, குற்றம், கொடுமைகளை உலகத்திலிருந்து வெருட்டியோட்டலாம். அச்சமென்னும் சர்ப்பங்களையும் குருட்டு நம்பிக்கை என்னும் பூதங்களையும் கொன்று விடலாம். மக்கள் புத்திசாலிகளாகவும். சுயந்தரர்களாகவும், சத்தியவாதிகளாகவும் சாந்த சீலர்களாகவும் அமைதியாக வாழலாம்.

வானமண்டலத் கடவுள்கள் முடிசாய்த்து விழ்வர்; நரகாக்கினிக் குண்டங்கள் அவிந்தொழிந்து போகும்; பிச்சைக்காரர் சன்யாசிகளும் பக்கிரிகளும் உண்மையுழைப்பாளராவர்; பூசாரி, புரோகிதர் பித்தலாட்டங்கள் ஓழியும்; புராணப் பொய் மூட்டைகளின் மதிப்பும் பெருமையும் குறையும்; பொன்னுலக வாழ்வுக்காக மண்ணுலக வாழ்வைத் தியாகம் செய்யத் தேவையுண்டாகாது. தேவர்களை நேசிப்பதற்குப் பதிலாக மக்கள் பரஸ்பரம் நேசிக்கத் தொடங்குவார்கள். பொன்னுலகப் பரிசை விரும்பாமல், மண்ணுலக இன்பத்தை முன்னிட்டு மக்கள் நற்கருமம் செய்து சுகமாக வாழ்வார்கள்.

கடவுள் அருளிய வேதம் இயற்கை ஒன்றே என்றும், தம் சொந்த முயற்சியினால் கட்சத்திரம், மேகம், பாறை, மண், கடல், ஆறு, மழை, நெருப்பு, கொடி, செடி, பூண்டு, பூ, காய் முதலியன கூறும் பிரபஞ்ச ரகசியங்களை அறிந்து சந்தோஷமாய் வாழலாமென்றும் மக்கள் உணர்ந்து கொள்வர்.

பிரபஞ்ச ரகசியங்களையும் உண்மைகளையும் மனிதன் அறியும்போது தனக்கு மேலான சக்தி ஒன்று இல்லையென்றும், பிரபஞ்சத்திலே மனிதனே மனிதனின் கடவுள் என்றும், அதாவது கடவுளை சிருஷ்டித்தவன் மனிதனே என்றும், தெரிந்துகொள்வான். பேச்சுச் சுதந்தரம் சிந்தனைச் சுதந்தரம் முதலியவைகளுக்கு எதிரிடையான வாதங்களை மனத்தால் கூட எண்ணமுடியாது. நமது சுயமரியாதையை காப்பாற்றி ஆத்ம பரிசுத்தத்தைப் பாதுகாப்பதை ஒருவராலும் ஆட்சேபிக்கவும் முடியாது.

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)=(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ... ... ரூ. 0 5 0

பிரகிருதிவாதம் ... ... ,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ... ,, 0 5 0

Hon பெர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ... ... ,, 0 3

மதம் மக்களுக்குச் செய்த நன்மைதென்ன? ... ,, 0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன? ... ... ,, 0 3 0

கடவுள் ... ... ,, 0 5 0

நான் சமுசயவாதியானதேன்? ... ... ,, 0 3 0

வால்டேர் ... ... ,, 0 4 0

பேய்-பூதம்-பிசாசு ... ... ,, 0 3-0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ... ... ,, 0 3 0

பிரபஞ்ச உற்பத்தி ... ... ,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ... ... ,, 0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும் 1-ம் பாகம் 0 6 0

ஷ 2-ம் பாகம் 0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம் 0 4 0

ஷ 2-ம் பாகம் 0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண் ணுரிமையும், மதமும் ... ... ,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (“ஞானகாம பதிப்பு”) ... ,, 0 5 0

மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.) 0 4 0

கிடைக்குமிடம்:—

மானேஜர், குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1	இந்தியாவின் குறைபாடுகள் (160பக்கம்)	0	8	0
2.	வெளிநாடும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குள் இவ்வுலகமில்லை	0	1	0
6	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7	,, அயோத்தியாகாண்டம் (200பக்கம்)	0	8	0
8	,, ஆரண்யகாண்டம்	0	4	0
9	,, கிஷ்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் தன்கதையை இப்பு (200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேலோக கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	சீர்திருத்தம் (க. வெ. ம.)	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமனிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைத் பாடல்	0	2	0
18	கதர் தொடக்கம் (இங்கிலீஷ்)	0	2	0
19	பர்னாட்ஷாவின் உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	பொல்ஷிவிசம்	0	1	6
22.	க. வெ. ம. இலக்ஷிய விளக்கம்	0	0	9
23.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
24.	சொத்திட ஆராய்ச்சி	0	4	0
25.	மனுதர்ம விளக்கம்	0	2	0
26.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (அந்தரங்கம்)	0	4	0
28.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
29.	புராண ஆராய்ச்சி முன்னுரைகளுடன்	0	8	0
30.	கர்ப்ப ஆட்சி	0	6	0
31.	ராவணப் பெரியார்	0	5	0
32.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	கராகம் எங்கே?	0	2	0
34.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
35.	கலைக்கியானம் அல்லது கைவல்யாக்கட்டினை	0	5	0
36.	பரிணாமவாதம் உண்மையா?	0	4	0

இடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnaswamy at the Unmai Vilakam Press, Erode.